விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 333 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 01 திங்கட்கிழமை (17.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

அடுத்து வரும் 3 நாட்களுக்கு

## வடக்கில் கனமழை விடாது பெய்யும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு 15ஆம் பக்கம் பார்க்க

சஜித்தைத் தொடர்ந்து

## இந்தியா செல்லும் ரில்வின் சில்வா

(கொழும்பு)

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மூன்று நாள் உத்தி 15ஆம் பக்கம் பார்க்க

- இரவோடு இரவாக -

# திருமலைக் கடலோரத்தில் புத்தர் சிலை பிரதிஷ்டை



பிக்குகள் - பொலிஸார் தள்ளுமுள்ளு



04ஆம் பக்கம் பார்க்க

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் உட்பட

# அனைத்து அரச நிறுவனங்களிலும் 'போதை' தடுப்புக்குழுக்கள்

## வருகிறது சுற்றுநிருபம்

(கொழும்பு)

அனைத்து அரசாங்க நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை அமைக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால உத்தரவிட்டுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)



## போதைவஸ்து கலாசாரம் வடக்கை பாலைவனமாக்கும்

அமைச்சர் சந்திரசேகர் கவலை



(யாழ்ப்பாணம்)

போதைவஸ்து பாவனை மற்றும் வாள்வெட்டு போன்ற குற்றச் செயல்கள் வட மாகாணத்தை ஆட்கொண்டுள்ளமையால் இளைஞர்களும் படித்த சமூகமும் வடக்கை விட்டு வெளியேறும் நிலை 15ஆம் பக்கம் பார்க்க

## 350 மருந்துகளின் விலை குறைப்பு

03ஆம் பக்கம் பார்க்க



## மாவீரர் துயிலும் இல்லங்கள் ஆத்மாக்கள் உறங்கும் இடம்


பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

தமிழ் மக்களுக்காகப் போராடிய மாவீரர்களின் துயிலும் இல்லங்களில் இராணுவத்தினர் சப்பாத்துக் கால்களுடன் நடமாடி அந்த இடங்களை உதாசீனப்படுத்துவது, நல்லிணக்க இடைவெளியை அதிகரிக்குமே தவிர அது ஒற்றுமையை ஏற்படுத்தாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட 04ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்கம் ஈட்டிய இலாபத்தை அபிவிருத்திக்கு பயன்படுத்துங்கள்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளைத் தாண்டி அரசாங்கம் ஈட்டியுள்ள இலாபத்தை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தவும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் 15ஆம் பக்கம் பார்க்க

## கிராம உத்தியோகத்தர் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர் சேவை தரம் III ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த சாதாரண தரத்தில் ஒரே அமர்வில் தமிழ், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் C தரச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத் 15ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறை வாசிக்கு ரூ.13.4 கோடி அதிர்ஷ்டம்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் தனநிதானய லொத்தரின் வாராந்த சீட்டிழுப்பில் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபரொருவர் சுப்பர் பரிசுத் தொகையான 13.4 கோடி ரூபாயுக்கும் அதிகமான பணத்தை தனதாக்கியுள்ளார்.

தேசிய லொத்தர் சபையின் வல்வெட்டித்துறை விற்பனை முகவர் 15ஆம் பக்கம் பார்க்க

## ஐயப்ப யாத்திரிகர்களுக்கு கேரள அரசு எச்சரிக்கை

(கோழிக்கோடு)

கார்த்திகை மாதம் ஐயப்ப சுவாமி யாத்திரை ஆரம்பாகும் நிலையில் கேரள மாநில சுகாதாரத்துறையானது அமீபாத் தொற்றுக் குறித்து விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.


அதன் பிரகாரம் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் நீர்நிலைகளில் நீராடுகையில் மூக்கினுள் நீர்புகாவண்ணம் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 ஆம் ஆண்டு

# நினைவலைகள்



தோற்றம்
19 . 01 . 1937

மறைவு
26 . 11 . 2016

அமரர்

## கிட்டிணன் பொன்னையா

(திதி : கார்த்திகை தேய்பிறை துவாதசி)

மீளாத்துயில் கொண்டு ஒன்பதாண்டு கடந்தாலும்
ஆறவில்லை எம் மனது
தீராத்துயரில் தவிக்கின்றோம் நாம் இங்கு
பாராட்டி சீராட்டி பாசமாய் வளர்த்தீரே பாதி வழியில்- எம்மை
பரிதவிக்க விட்டு விட்டுச் சென்றதென்ன, குடும்பத்தின் ஆணிவேராய்
வழிகாட்டி வாழ்ந்தவரே - நீங்கள்
நீறாகிப்போனாலும் உங்கள் வழித்தடத்திலேயே - நாம்
என்றென்றும் தொடர்ந்திடுவோம் இன்னும் ஆண்டாண்டு காலம்
கடந்தோடிப்போனாலும்- உங்கள் புன்னகை பூத்த முகம் - எங்கள்
நெஞ்சோடு வாழ்ந்திருக்கும்.

கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(C-4341)

# மட்டக்களப்பில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, காயங்கேணி கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் இனம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடற்கரையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற தடயவியல் பொலிஸார் சகிதம் சென்ற பொலிஸார் உருக்குலைந்த நிலையில் கிடந்த சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ந-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணக்காளர்
செல்வி சுந்தரலிங்கம் சுவஸ்திகா
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

## சுந்தரலிங்கம் மனோரஞ்சிதம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(இ) வலம்புரி குடும்பம்

# மரண அறிவித்தல்



## சுந்தரலிங்கம் மனோரஞ்சிதம்

கணேஸ்வரம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் மனோரஞ்சிதம் அவர்கள் நேற்று (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வன்னியன் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் டிலக்சன், சுவஸ்திகா, துவாரகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானசேகரன் (லண்டன்), குணசேகரன், சந்திரசேகரன், உதயகலா (சுவிஸ்), உதயதர்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வேலாயுதம், தவமணி, செல்லமணி, லோகமணி, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சிவலிங்கம், சிவமணி மற்றும் வனிதா, யாழினி, தங்கராணி, விக்கினேஸ்வரன் (சுவிஸ்), குமுதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2025) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது தாயாரின் இல்லத்தில் (கணேஸ் வரம், அளவெட்டி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

(C-4343)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் அழைப்புக் கடிதம் போலியா?

## விசாரிக்க இங்கிலாந்து புறப்பட்ட சி.ஐ.டி


(கொழும்பு)

**வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் அழைப்புக் கடிதத்தின் நம்பகத்தன்மையை ஆராய ஐந்து பேர் கொண்ட குற்றப் புலனாய்வு குழு இங்கிலாந்துக்குச் சென்றுள்ளது.**

இந்த தகவலை ஆங்கில செய்தித்தாள் ஒன்று வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள முன்னாள் இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேனவிடம் இந்த குழு இன்று வாக்கு மூலத்தை பதிவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023, செப்டெம்பரில், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள இங்கிலாந்துக்கு சென்ற போது, சரோஜா சிறிசேனவே இங்கிலாந்துக்கான உயர்ஸ்தானிகராக செயற்பட்டார்.



இதன்படி, இங்கிலாந்தில் தற்போது வசிக்கும் சிறிசேன, லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் வாக்குமூலம் அளிக்க முன்னிலையாகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க குறித்த இரண்டு நாள் பயணத்தின் போது 16.6 மில்லியன் ரூபாய் பொது நிதியை செலவு செய்தமை, ஒரு தனிப்பட்ட பயணத்துக்கானது என்று குற்றப்புலனாய்வு துறையினர் கூறுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க, இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பொலித்தீனுக்கு பதிலாக காகித பைகள்

### துறைசார் குழு பரிந்துரை

(கொழும்பு)

பொலித்தீன் பைகளுக்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த காகிதப் பைகளை உற்பத்தி செய்யுமாறு சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறை சார் மேற்பார்வைக் குழுவினால் அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பொருட்களை வாங்கும் போது பொலித்தீன் பைகளுக்கு ஒரு தொகையை அறவிடும் முடிவு குறித்து கவனம் செலுத்தி, குறித்த மேற்பார்வைக் குழு இந்தப் பரிந்துரையைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, குழுவின்தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, இந்த நடவடிக்கையின் மூலம் பொலித்தீன்பயன்பாடுகுறைகிறதா என்பது குறித்து ஆராயப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். (நி)

## தமிழர்களுக்கு நீதி வழங்குவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியுடன் உள்ளது

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு இல்லை.

அதனை நாம் ஆதரிக்கின்றோம். அதேபோல் வடக்கு, கிழக்கு மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி அவசியம் என்ற நிலைப்பாட்டிலும் எமது கட்சி உறுதியாக உள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வு முன்வைக்கப்படவில்லை. ஜனாதிபதி இந்த வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் உரையாற்றுகின்றாரா என்று எனக்குத் தோன்றியது.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்க நாம் ஒருபோதும்



இடமளிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் யோசனைகளை வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைத்துள்ளனர்" என குறிப்பிட்டுள்ளார். (நி)

## 350 மருந்துகளின் விலை குறைப்பு

### தேசிய ஔடதங்கள் அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது சுமார் 350 வகையான மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்காலத்தில் சுமார் 250 வகையான மருந்துகளின் விலையை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர் நோய்கள், இருதய நோய்கள், புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல நோய்களுக்காக வழங்கப்படும் மருந்துகளின் விலையே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன.

இதில், சில மருந்துகளின் விலை 50 சதவீதத்தால் குறைந்துள்ளதாகவும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, மருந்துகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச விலையை மீறி அவற்றை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அந்த அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். (நி)

## போதைப்பொருள் தடுப்புத் திட்டம்

# 1,100 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் போதைப் பொருளை தடுக்கும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, இலங்கை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான, போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளுக்கமைய, 531 கிராம் ஹெரோயின், 754 கிராம் ஐஸ், 8 கிலோகிராம் 953 கிராம் கஞ்சா, 82,605 கஞ்சா செடிகள், 6 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 249 போதை மாத்திரைகள் மற்றும் 4 கிலோ கிராம் 121 கிராம் மாவா போதைப்



பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேநேரம், குறித்த போதைப் பொருட்களுடன் தொடர்புடைய 1,115 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 1,131 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 63 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


மணிவிழா வாழ்த்து




செல்வி.செல்வகுமாரி சுப்பிரமணியம்

(SLTAS) (Pri.Trd, B.A.PGDE. Med)

வலிகாமம் கல்வி வலயத்தில்
ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக
எம்முடன் பணியாற்றி 17.11.2025 இல்
மணிவிழா கொண்டாடும்
செல்வி.செல்வகுமாரி சுப்பிரமணியம்
அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதில்
மகிழ்வடைகிறோம்.
உங்கள் அறிவும் அனுபவமும்
நிறைந்த ஆலோசனைகள்
எமக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன.
இன்றைய மணிவிழா நாளில் மனமார்ந்த
வாழ்த்துத் தெரிவித்துக்கொள்வதுடன்
தங்களது ஓய்வுக்காலம் உடல்நலமுடன்
மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துகிறோம்.

(5925)

வாழ்த்துவோர்: ஆரம்பக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில்

# தென்னாபிரிக்கா அபார வெற்றி!

**இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.**




கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இந்தியா, தென்னாபிரிக்கா அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்றது.

தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சில் 159 ஓட்டங்களிலும் இந்தியா 189 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தன.

பின்னர் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா 153 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்திய அணிக்கு 124 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அதன்படி களமிறங்கிய இந்திய அணியில் தொடக்க வீரர்கள் சொதப்பினர். வாஷிங்டன் சுந்தர் மட்டும் நின்று ஆட, ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

ஹார்மர் தனது சுழலில் கடும் நெருக்கடி கொடுத்தார். அணியின் ஸ்கோர் 72 ஆக இருந்தபோது வாஷிங்டன் சுந்தர் 31 ஓட்டங்களில் மார்க்ரம் ஓவரில் ஆட்டமிழந்தார்.

இறுதிக் கட்டத்தில் 2 சிக்ஸர்களை பறக்கவிட்ட அக்ஷர் பட்டேல் 26 ஓட்டங்களில் கேஷவ் மஹாராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சிராஜூம் அதே ஓவரில் ஆட்டமிழக்க இந்திய அணி 9 விக்கெட்டுக்கு 93 என தோல்வியுற்றது.

கில் கழுத்து வலி காரணமாக களமிறங்கவில்லை. இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. சிமோன் ஹார்மர் 4 விக்கெட்டுகளும், ஜென்சென், மஹாராஜ் தலா இரண்டு விக்கெட்டுகளும் வீழ்த்தினர். (3)

## மாவீரர்...

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை (15) நடைபெற்ற 2026 வரவு செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவீன தலைப்பின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஜனாதிபதிக்கு கடிதங்கள் சிலவற்றை அனுப்பியுள்ளேன். தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணி விடுவிப்புத் தொடர்பிலும் கிளிநொச்சி மகாவித்தியாலய காணி விடுவிப்புத் தொடர்பிலும் வடக்கு, கிழக்கில் சிவில் செயற்பாடுகளில் இராணுவத் தலையீட்டை நிறுத்துமாறும் கோரி கடிதங்களை அனுப்பியிருந்தேன். ஆனால் அவற்றுக்கு இன்று வரை ஜனாதிபதியினால் பதிலளிக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளதாக அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானம் ஏற்பட வேண்டும். புதிய அரசாங்கம் வந்துள்ளது. நீங்கள் ஒரு வருடத்தைக் கடந்துள்ளீர்கள். இந்த நாட்டில் தமிழ் மக்களுக்காகப் போராடிய மாவீரர்களின் துயிலும் இல்லங்களில் அவர்களின் சமாதிகளுக்கு மேல் சப்பாத்துகால்களுடன் இராணுவம் விளையாடுவதும், அதில் நடந்து திரிந்து அந்த இடங்களை உதாசீனப்படுத்தவதும் இந்த நாட்டில் உங்களுக்கும் எங்களுக்குமான நல்லிணக்க இடைவெளியை அதிகரிக்குமே தவிர அது ஒற்றுமையை ஏற்படுத்தாது.

நீங்கள் இந்த நாட்டில் வதைபட்டு கொல்லப்பட்ட சிங்கள இளைஞர்களைக் கடந்த 13ஆம் திகதி நினைவு கூர்ந்தீர்கள்.

இந்த நாட்டின் ஜனாதிபதி, அமைச்சர்கள் உள்ளிட்டோர் மலர் வைத்து நினைவு கூர்ந்தீர்கள். உங்களுக்குள்ள அதே வலிகள், உணர்வுகள் எங்களுக்கும் உள்ளது. இதனைப் புரிந்துகொள்ளுங்கள். துயிலும் இல்லங்கள் ஆத்மாக்கள் உறங்கும் இடம். தமிழர்களின் மிகப்பெரிய ஆசைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்திய இடம்.

நீங்களும் போராட்ட இயக்கங்களில் இருந்து நாட்டின் அரசாங்கத்தை கைப்பற்றியுள்ளீர்கள். இந்த அரசாங்கத்தை நாங்கள் கைப்பற்றமாட்டோம். அதற்கான தேவையுமில்லை. உங்களின் சட்டத்தின்படி அதனைச் செய்யவும் எங்களால் முடியாது.

ஆனால் நாங்கள் இந்த நாட்டின் தேசிய இனம். எம் மக்களின் உரிமைகள் மற்றும் எண்ணங்களை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். காலமும் வரலாறும் உங்களுக்கு நல்ல செய்திகளை வெளியிடுகின்றன. இதனால் மாவீரர் நாளில் துயிலும் இல்லங்களை விடுவித்தால் அந்த மக்களின் மனங்களில் நீங்கள் மாற்றங்களை கொண்டுவந்தவர்களாக இருப்பீர்கள் என்றார். (ந-7)

## அனைத்து ...

தொன் கணக்கிலும் கிலோகிராம் கணக்கிலும் போதைப்பொருட்கள் தொடர்ச்சியாகக் கைப்பற்றப்பட்டு வரும் நிலையிலும், நாட்டில் அவை இன்னமும் பெருமளவில் புழக்கத்தில் இருப்பதையடுத்து, போதைப் பொருளை ஒழிக்கும் நோக்குடன் அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே குறித்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பாவனைக்கான தேவையை முற்றாக நீக்குவதற்கும் இந்தக் குழுக்கள் செயற்படும். பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை இன்று (17) வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின்படி, ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் தமது நிறுவனத்தை போதைப்பொருள் அற்ற நிறுவனமாக உறுதிப்படுத்துவது கட்டாயமாகும். போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அல்லது பாவனையாளர்கள் நிறுவனங்களில் இருப்பது கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கும் பொறுப்பு நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, கல்விச் செயலாளர் ஊடாகவும் இன்று (17) சுற்றறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளது. இதன்மூலம், அனைத்துப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் போதைப் பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படவுள்ளது.

தொலைதூரக் கிராமப் பாடசாலைகளில் கூட போதைப்பொருள் பாவனை குறித்த தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இந்த நடவடிக்கை அவசியமாகிறது. தற்போது பல இடங்களில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போதைப்பொருள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் வழங்க வசதியாக 1818 என்ற புதிய இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தேசிய போதைப்பொருள் சபைக்கான அலுவலகம் ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

தற்போது ஜனாதிபதி செயலகம் ஊடாகத் தற்காலிகமாக 1818 என்ற இலக்கம் செயற்பட்டு வருவதுடன், முதல் 5 நாட்களில் மாத்திரம் சுமார் 1000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இந்தத் தகவல்களின் அடிப்படையில் தற்போது சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (ந-7)

## திருமலைக் ...

திருகோணமலை பிரட்ரிக் கோட்டை டச்பே கடற்கரையோரமாக அமைந்துள்ள ஸ்ரீ சம்புத்த ஜயந்தி போதி ராஜ விகாரையின் அருகில் நேற்று இரவோடு இரவாக அடாத்தாக நிறுவப்பட்ட புத்தர்சிலை பொலிஸாரால் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அகற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொட்பில் மேலும் தெரியவருவதாவது,

சுனாமிக்கு முன் குறித்த பகுதியில் காணப்பட்ட பிரிவேனாவை மீண்டும் நிறுவப்போவதாகக்கூறி பிக்குகள் குழுவொன்றால் நேற்று முன்தினம் இரவோடு இரவாக குறித்த பகுதியில் பெயர்ப்பலகை அமைக்கப்பட்டு கட்டுமான வேலைகள் நேற்றுக் காலை முதல் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் இதுகுறித்து ஆய்வு செய்யச்சென்ற கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் கடுமையாக அச்சுறுத்தப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து கட்டுமானங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியதுடன் இது தொடர்பாக நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கானது இன்று விசாரணைக்கு வரவுள்ள நிலையில் குறித்த பகுதியில் நேற்று இரவோடு இரவாக கட்டுமாணங்கள் தொடர்ந்ததுடன் புத்தர் சிலையும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இச்சம்பவமானது பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் பிக்குகளின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் பொலிஸாரால் குறித்த புத்தர் சிலை சில மணிநேரங்களுக்குள் அகற்றப்பட்டது.

இதன்போது பொலிஸாருக்கும் பிக்குகளுக்குமிடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதுடன் பொலிஸ் அதிகாரி ஒருவரும் பிக்குவால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அங்கு மிகவும் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.(ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)........................................

**அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதியால் முன் வைக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சுகாதார சேவைகள் மற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகளை முறையாகத் தீர்க்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசாங்கத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், இதற்குச் சாதகமான பதில் கிடைக்காததால் தமது சங்கம் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானித்ததாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# வடக்கில் 4 வைத்தியசாலைகளை கையகப்படுத்தவுள்ள அரசாங்கம்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில், மாகாண சபைகளின் கீழ் செயற்படும் 4 மருத்துவமனைகளை மத்திய அரசின் சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரவுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளின் கீழ் உள்ள மொத்தம் 7 மருத்துவமனைகளை, மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரத் தயாராக உள்ளதாக, அவர் அறிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் உள்ள 3 மருத்துவமனைகளையும், வடமாகாணத்தில் உள்ள 4 மருத்துவமனைகளையும் இவ்வாறு மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மாகாண சபைகளின் அனுமதியை கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


# துப்பாக்கி மீட்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு 9 ஆம் வட்டார பகுதியில் பாவனையற்ற காணியில் இருந்து துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் மேற்படி துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சான்று பொருளாக துப்பாக்கி ஒப்படைக்கப்பட்டுள்ளது



சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-33)

# வீதி மின் விளக்குகள் இன்மையால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்!



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் பிரதான சந்தி வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாமையினால் இரவு வேளைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன் வழிப்பறிக் கொள்ளைகளும் அதிகரித்து காணப்படுகின்றன.

அத்துடன் ஏ-9 பரந்தன், முல்லைத்தீவு, பூநகரி ஆகிய வீதிகளில் காணப்படுகின்ற பாதசாரி கடவைகளிலும் மின் விளக்குகள் இல்லாத நிலை காணப்படுகின்றன.

இரு அரச வங்கிகள், தபாலகம், பல நோக்கு கூட்டுறவு சங்கம், எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளிட்ட சேவை நிலையங்கள் பரந்தன் சந்தியை மையப்படுத்தியே அமைந்துள்ளன.

இவ்வாறு பயணிகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பிரதான பகுதியில் வீதி மின் விளக்குகள் இல்லாது இருள் மூழ்கிய பகுதியாகவே காணப்படுகிறது.

எனவே இது தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுத்து வீதி மின் விளக்குகளை பொருத்துவதற்கும் சரியான போக்குவரத்து சாலை விதிகளை பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-315)

# வாகன இலக்கத்தகடுகள் விநியோகம் மீண்டும் தாமதம்

(கொழும்பு)

புதிய வாகன இலக்கத் தகடுகளை முன்னர் அறிவிக்கப்பட்ட காலத்துக்குள் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப சோதனை நடவடிக்கையில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் முன்னதாக இந்த மாதம் புதிய வாகன இலக்கத்தகடுகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், வழங்கப்பட்ட திகதிக்குள் அதனைப் பூர்த்தி செய்யமுடியவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் புதிய வாகன இலக்கத்தகடுகளை வழங்குவதற்கு முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வாகன இலக்கத் தகடுகளின்றி ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளதாக போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

# பனம் விதை நடுகை செயற்றிட்டம்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு கிராமத்தில் விதைகள் உறங்குவதில்லை எனும் திட்டத்தின் கீழ் புளுஸ் அறக்கட்டளை மற்றும் புளுஸ் விளையாட்டு கழகத்தினரின் நிதி அனுசரணையுடன் ஜன நாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் பனம் விதை நடுகை திட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.



இவ் நிகழ்வில் ஜன நாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன், வடமராட்சி கிழக்கு சமூக ஆர்வலர்களான அ.ரெஜி மற்றும் விமலவன் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (8-60)

முல்லைத்தீவு, மாங்குளம், சிலாவத்தை, கொக்குத்தொடுவாய், கர்நாட்டுகேணி, வட்டுவாகல் , ஆறுமுகத்தான்குளம், உடையார்கட்டு , மூங்கிலாறு, முள்ளியவளை, விசுவமடு, செல்வபுரம், கூழாமுறிப்பு ஆகிய பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு உலக தமிழரின் ஏற்பாட்டில் சமூக செயற்பாட்டாளரும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினருமான ஞானதாஸ் யூட்சன் தலைமையில் முள்ளியவளை பரிமத்தியா மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (படங்கள்-சதீஸ்)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகரசபையின் குடிநீர் விநியோகத்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் குடிநீர் விநியோகக்குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளமையால் திருத்த வேலை நிறைவு பெறும் வரை பிரதான தாங்கி மூலம் நீர்விநியோகம் நடைபெறும் பகுதிகளுக்கான நீர்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (8)

# கண் திறந்த பிள்ளையார் வவுனியாவில் அதிசயம்



(வவுனியா)

பிள்ளையார் கண்திறந்த காட்சியினைக் காண மக்கள் படையெடுத்த சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம் பெற்றுள்ளது.

வவுனியா தோணிக்கல் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்திலுள்ள பிள்ளையார் சிலையின் கண்களானது மூடிய நிலையிலேயே காணப்பட்டது. இந் நிலையில் கடந்த 14 ஆம் திகதி குறித்த சிலையின் கண்கள் திடீரென திறந்துள்ளது.

பக்தர் ஒருவர் வழிபடச் சென்ற போது குறித்த பிள்ளையார் சிலையில் ஒரு கண் திறந்து இருந்துள்ளது.

அதன் பின் இரு கண்களும் திறந்த நிலையில் பிள்ளையார் காட்சி கொடுத்துள்ளார். அவர் அதனை ஏனையவர்களுக்கு தெரிவித்த நிலையில் பலரும் அவ் அதிசயத்தை பார்க்க சென்றனர். சிறிது நேரம் திறந்து இருந்த கண்கள் பின்னர் வழமையான நிலைக்கு சென்றுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயத்தை அறிந்த பொதுமக்கள் கோவிலைச் சூழ்ந்து பிள்ளையாரை பார்த்துச் சென்றதனை அவதானிக்க கூடியதாக இருந்தது. (8-250)

# சட்டவிரோத மணல் அகழ்வு டிப்பர், உழவு இயந்திரம் பறிமுதல்

## கண்டாவளையில் சம்பவம்

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை வெலிக்கண்டல் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் ஒன்றும் உழவு இயந்திரம் ஒன்றும் விசேட அதிரடிப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் அகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன

இந்நிலையில் கிளி.மாவட்ட அரச அதிபர் மற்றும் மாவட்ட உயர்நிலை அதிகாரிகள் ஆகியோர் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிட்டதுடன் சிறப்பு அதிரடிப்படையினருக்கும் தகவல் வழங்கி இருந்தனர்.

இந்நிலையில் விசேட அதிரடிப்படையினர் கடந்த 14 ஆம் திகதி இரவு குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்தையும் உழவு இயந்திரத்தையும் பறிமுதல் செய்ததுடன் 2 சந்தேக நபர்களையும் கைது செய்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-316-315)

# கூட்டமாக வந்த டொல்பின்கள்



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை கடற்கரை பகுதியை நோக்கி நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் ஒரு தொகை டொல்பின் மீன்கள் கூட்டமாக வந்தடைந்தன.

இந்த நிலையில் இதனை அறிந்த அப்பகுதி மீனவர்கள், பொதுமக்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் சென்று பார்வையிட்டதோடு, சிறுவர்களுடன் டொல்பின் மீன்கள் விளையாடியதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

குறித்த டொல்பின் மீன் இனம் மன்னார் மாவட்டத்தில் கரையோர பகுதிக்கு கூட்டமாக வருகை தந்தமை இதுவே முதல் தடவையாகும்.

நீண்ட நேரம் இலுப்பை கடவை கடற்கரையோரங்களில் கூட்டமாக சுற்றி திரிந்த குறித்த டொல்பின் மீன்களை தமது இருப்பிடம் நோக்கி செல்ல சில மீனவர்கள் உதவியை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் குறித்த டொல்பின் மீன்கள் மீண்டும் கூட்டமாக தமது இருப்பிடத்தை நோக்கி சென்றன.

குறித்த அரிய காட்சியை மீனவர்கள் தமது கையடக்க தொலைபேசியில் காணொளியாக பதிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (8-285)

# பலநாள் திருடன் கைது!

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் கடந்த பல வருடங்களாக தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொதுமகன் போல் வேடம் அணிந்து ஐஸ் போதை பொருளை பெற்றுக்கொண்ட சமயம் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 560 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளும் 1000 ரூபா பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு திருட்டு சம்பவத்தில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த குறித்த 26 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் .

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-60-316)

# திருமுறைச் சிவவேள்விப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், சங்குவேலி வயிரவர் காளி அம்பாள் தேவஸ்தான திருமுறைச் சிவ வேள்விப் பெருவிழா எதிர் வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் விசேட பூசை நடைபெற்று 5.55 மணிக்கு திருமுறை சிவவேள்வி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இரவு பகலாக 14 நாட்களும் இடைவிடாது ஓதப்படும்.

14 ஆம் நாள் (04.12. 2025) வியாழனன்று பூரணைத் திதியும் கார்த்திகை நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் அகண்ட நாம கூட்டுப் பிரார்த்தனையும், திருமுறை 1008 போற்றி அருச்சனையும் நடைபெற்று திருமுறை சிவவேள்விப் பெருவிழா நண்பகல் 12 மணிக்கு நிறைவடையும்.

எனவே இந்த தொடர் பிரார்த்தனையில் கலந்து கொண்டு திருமுறை ஓதுவதற்கும், வாசிப்பதற்கும், சிவமூல மந்திரம் உச்சரிப்பதற்கும் அந்தணர் ஒன்றியங்கள், ஆலய நிர்வாகங்கள், ஓதுவார்கள், சைவ சமய நிறுவனங்கள், சங்கீத ஆசிரியர்கள், பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் சகல மக்களையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் திருமுறை ஓதுபவர்களுக்கு தங்குமிடம், உணவு போன்ற ஒழுங்குகள் செய்து தரப்படுமென்பதுடன் நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக பதிவுகளை 077 2262 572 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளனர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 200 | 220 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 250 | 300 | 240 |
| தக்காளி | 160 | 200 | 180 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 100 | 200 |
| கோவா | 200 | 200 | 200 | 250 | 180 |
| கரட் | 200 | 260 | 300 | 250 | 220 |
| பூசணி | 60 | 80 | 50 | 80 | 50 |
| புடோல் | 180 | 300 | 120 | 250 | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 50 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 200 | 350 | 150-250 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 150 | 200 | 180 |
| பாகற்காய் | 800 | 700 | 400 | 800 | 400 |
| வெண்டக்காய் | 150 | 200 | 120 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 200 | 180 | 200 | 300 | -- |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 240 | 220 | 250 | 200 | 160 |
| பீற்றூட் | 200 | 160 | 120 | 200 | 150 |
| கறிமிளகாய் | 800 | 550 | 600 | 800 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 500 | 400 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 600 | 350 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 120 | 150 | -- |
| கீரை – 1 பிடி | 140 | 60-140 | 80 | 120 | -- |
| தேசிக்காய் | 800 | 1600 | 1000 | 800 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 150-200 | -- |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 800 | -- |
| வெங்காயப்பூ | 400 | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | -- |
| ஈரப்பலா | 100 | 100-150 | 120 | 200 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் வட்டார வடிகால் பிரச்சினைகள் நேரில் ஆராய்ந்தார் முதல்வர் மதிவதனி



(யாழ்ப்பாணம்)

புதிய சோனகதெரு 10 ஆம் வட்டாரத்தில் வெள்ள வடிகால் மழை நீர் வழிந்தோட முடியாத வகையில் குடியிருப்பாளர்கள் சிலரால் தடைகள் போடப்பட்டு அடைத்து வைக்கப்பட்ட பிரச்சினை தொடர்பாக வட்டாரத்தின் இரு உறுப்பினர்களினாலும் கடந்த சபை அமர்வில் விவாதிக்கப்பட்டது. இவ் விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்.மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா குறித்த பகுதிக்கு களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இவ் விஜயத்தில் 10 ஆம் வட்டாரம் மானிப்பாய் வீதியில் அமையப்பெற்றுள்ள பிரதான வீதியின் வெள்ள வாய்க்காலில் போடப்பட்ட தடை தொடர்பில் முதல்வர் ஆராய்ந்தார். சிலர் குறித்த பகுதி வாய்க்கால் என்றும் சிலர் அது ஒழுங்கை என்றும் முதல்வருடன் வாதிட்டனர்.

குறித்த பகுதியில் வெள்ளம் தேங்கியிருந்த நிலையில் இது தொடர்பில் உரிய துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடி மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் வெள்ள நீர் வழிந்தோடக் கூடிய வகையிலும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

மேலும் மேற்படி வட்டாரத்தில் உள்ள கோம்பயன் மணல் முன்றல் குளம், அதனை அண்டிய மற்றைய வடிகால்கள் அடைபட்டுக் காணப்படுகின்றமை தொடர்பாகவும் அதனால் மழைநீர் வழிந்தோட முடியாமல் மக்கள் குடியிருப்புக்களுக்குள் மழைநீர் செல்வதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் முதல்வர் ஆராய்ந்தார். மழை வெள்ள நீர் வழிந்தோடக்கூடிய வகையில் தற்காலிக நடவடிக்கைகளை முன்னெடுக்க உரிய அதிகாரிகளுக்கும் முதல்வர் உத்தரவிட்டார்.

முதல்வரின் மேற்படி விஜயத்தில் பிரதி முதல்வர் இ.தயாளன், வட்டார உறுப்பினர்களான எஸ்.மதுசிகான், ப.வசீகரன், மாநகரசபை உறுப்பினர்களான ஜெ.மயூரன், கிருஸ்ணகுமார், வி.தயாபரன், என்.எம்.அப்துல்லாஹ், ஆர்.எப்.றிஸ்லா, ப.தர்சானந்தன், மாநகர தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)


## கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## விண்ணப்பம் கோரல்-வெளிவாரி

**01. பதவியின் பெயர் : காசாளர்**

பதவிக் குறியீடு : 306/13
சம்பள அளவுத்திட்டம் : 33360 - 520x10-580 X 10-740 X 10-51760 02/2025 (01)
சுற்றறிக்கைக்கு அமைவாக

**தகைமைகள்:**

அ. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திர பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ், கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி

**02. பதவியின் பெயர்: எழுதுனர்**

பதவிக் குறியீடு: 302/15
சம்பள அளவுத்திட்டம் : 32435-460 x 10 - 520 x 10 - 680 x 10 - 49035 02/2025 (01)
சுற்றறிக்கைக்கு அமைவாக

**தகைமைகள்:**

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர், காசாளர், கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திர பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ், கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி

**03. பதவியின் பெயர்: அலுவலக உதவியாளர்**

பதவிக் குறியீடு: 317/17
சம்பள அளவுத்திட்டம்: 31515 - 360 × 10-450 X 10-500X10-45615 02/2025 (01)
சுற்றறிக்கைக்கு அமைவாக

**தகைமைகள்:**

அ. கூட்டுறவு ஊழியர் கனிஷ்டதரப்பத்திரம் / 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்

**நிபந்தனைகள்**

01. 18-45 வயதிற்கிடைப்பட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் கூட்டுறவுச்சங்கங்களில் நிரந்தரப்பதவி வகிப்போருக்கு இவ் வயதெல்லை பொருத்தமற்றது என்பதுடன் விண்ணப்பதாரிகள் தத் தமது கூட்டுறவுச் சங்கங்களினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
02. சங்கத்தின் தொழிற்பரப்பில் வதிபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
03. விண்ணப்ப முடிவுத்திகதி : 05.12.2025
04. விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**கொடிகாமம் வீதி, நெல்லியடி.**

(C-4339)



## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் - 06.12.2025

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி எதிர்வரும் 06.12.2025 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு சங்க தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றேன்.

**தலைவர்**
**சங்கானை. ப.நோ.கூ.சங்கம்(வ.து)**

(C-4338)



## பிறவிப் பிணியை நீக்கும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் ஆலயத்தில் காலை 10 மணியளவில் பிரதோசம், சாயந்திரம் கார்த்திகை சோமவார விரதம் வாரீர் தரிசிப்போம் இன்று

**தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்**
**நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்**
**ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ**
**ஓடிப்போம் நமது உள்ள வினைகளே**

நாவுக்கரசர் அண்ணாமலை திருமுறை

இறைவனை தேடிச் சென்று திருந்தடி ஏத்திப்பாடி அண்ணாமலை யானை கைதொழ-நம் வினைகள் ஓடிப்போய்விடும் - தினம் இறைவனை - காலை மாலை பாடித் தொழுதிடுவோம்

**வான்பாவிய உலகத்தவர் தவமே செய்ய அவமே**
**ஊன் பாவிய உடலைச் சுமந்து அடவிமரம் ஆனேன்**
**தேன்பாய் மலர்க்கொன்றை மன்று திருப்பெருந்துறை உறைவாய்**
**நான் பாவியன் ஆனால் உனை நல்காய் எனல் ஆமே**

திருவாசகம் - 36 உயிருண்ணிப்பத்து


இது தேன் மணிவாசகர் இறை நிறைவில் அடங்கி இறவா இன்பம் துய்க்கும் பெருநிலை ஓதிய நான் வீணாகப் புலால் நிரம்பிய உடம்பைச் சுமந்து காட்டு மரம் போல் பயணிலேன் ஆயின் திருப்பெருந்துறையில் வீற்றருப்பவனே, எமக்கு ஆசானாக அறிவினை வளர்த்து, ஆருயிர்களின் இறவாத இன்ப அன்பின் அருள் உயிரை உண்பவன் ஆத்மநாதன் ஓம் நமசிவாய சிவ சிவ.

எம் பெருமானை நினைந்து தவ வாழ்வு ஆக சோமவார விரதம், பிரதோஷம் சிவன் சந்நிதானத்தில் எம்பெருமானை சிவ அபிஷேகம் தரிசித்து மகிழ்வித்து பாமலர்களோடு பூமலர்களால் அர்ச்சித்து சகல சௌபாக்கியங்களையும் வரமாக நல்குமாறு கையாற தொழுத்தருவி கண்ணாரச் சொரிந்து சிவ சிவ என இரந்து கேட்கும் அற்புத விரதமே சோமவாரம், பிரதோஷம் ஆகும்.

சிவாலயம் சென்று வழிபடுதலானது சிவம்பேறளிக்கும் அருள் நாமும் உய்ந்து எம்பெருமானிடம் **"உம் கையில் எம் பிள்ளைகள் உமக்கே அடைக்கலம்" எனவும் எம் சமுதாயம் சந்ததி நல்ல பழக்கம் சைவ நெறியிலும் வாழ நல்ல புத்தி தந்து வாழ வேண்டும் என்று பரிந்து நாடி திருவாசகம் ஓதியும் சிவபுராணம் ஓதியும் பாமாலை சாற்றி மனம் உருக விரதம் நோற்பவர்களுக்கு சிவன் "வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதும் தருவான்"** கார்த்திகை மாதம் திங்கள் தோறும் அருள்கொழிக்கும் சோமவார விரதம் மனமுறிவு வழக்குகள் திருமணம் நிகழ்வும், குழந்தை இன்மை, நோய்கள், பிறவி நோய் யாவற்றிலும் மீண்டு பேரின்ப வாழ்வும் எல்ல நலனும் தரவல்லது. சோமவாரவிரதம், பிரதோச விரதம் சிவபெருமானை வழிபட்டு சிவ மந்திரங்க்ள சிவசிவ ஓம் நமசிவாய-திருவாசகம் ஓதியும், இயன்ற தான தருமமும் செய், சிவபெருமானைப் பிரார்த்திப்போமாக

பட்டினத்தார் பாடல் கையிலாயம் - 1

**கான் சாயும் வெள்ளி மலைக்கரசே! நின் கழல் நம்பினேன்**
**ஊன்சாயும் சென்மம் ஒழித்திடுவாய்! கரவூரனுக்காய்**
**கான்சாய்க் செங்கை மழுவலஞ்சாய வனைந்த கொன்றை**
**தேன்சாய திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே!**



**க.கு.கு சிவபாலன் K.K.K**
**சிவநெறிப்புரவலர், பாஞ்சசண்யம்**


(C-4337)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# மூளையை உண்ணும் அமீபா தொற்று

## சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு விசேட அறிவுறுத்தல்



(டில்லி)

கேரளாவில் மூளையை உண்ணும் அமீபா தொற்று பரவி வரும் நிலையில், சபரி மலை செல்லும் பக்தர்கள் நீர் நிலைகளில் குளிக்கும் போது, எச்சரிக்கையுடன் இருக்குமாறு அந்த மாநில சுகாதாரத்துறை அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கேரளாவில் சில இடங்களில், "அமீபிக் மெனிங் கோஎன்செபாலிடிஸ்" என்ற நோய் பரவி வருகிறது.

இந்தநிலையிலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குளிக்கும் போது மூக்கிற்குள் நீர் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என பக்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## கழிவு நீரில் போலியோ வைரஸ் கண்டுபிடிப்பு

# ஆய்வாளர்கள் எச்சரிக்கை

(பேர்லின்)

20 ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் உலக நாடுகளை அச்சுறுத்திய நோயாக போலியோ நோய் காணப்பட்டது.

'போலியோ' என்று அழைக்கப்படும் 'போலியோ மைலி டிஸ்' நோயானது , குறிப்பாக 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அதிகமாக பாதிக்கின்றது.

இது பெரும்பாலும் அறிகுறியற்றது, ஆனால் காய்ச்சல், வாந்தி போன்றவை ஏற்படலாம்.

போலியோவைரஸ் கிருமியில் 2 ரகங்கள் உள்ளன.

முதலாம் வகை அரிதானது. இந்த வைரஸ் தற்போது ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் மட்டுமே காணப்படுகிறது.

இரண்டாவது ரகம் பொதுவாக காணப்படும் போலியோ பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

ஆனால் அதுவும் தற்போது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜேர்மனியின் ஹாம்பர்க் நகரில் கழிவுநீர் மாதிரியில் முதல்முறை போலியோ வைரஸின் 1ஆம் வகை வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை.

எனினும், முறையான தடுப்பூசி செலுத்தாத நபர்களுக்கு போலியோ பாதிப்பு ஏற்படக்கூடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி)



## காசா விவகாரம்; ஐ.நா

# அமெரிக்காவுக்...

# வரைவு தீர்மானம் மு...

(நியூயோர்க்) ——

காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது தொடர்பான வரைவு தீர்மானத்தை ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேற்ற அமெரிக்கா முயற்சித்து வரும் வேளையில், இதற்கு மாற்றாக மற்றொரு வரைவு தீர்மானத்தை ரஷ்யா முன்வைத்துள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாவை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே இரண்டு ஆண்டுகளாக போர் நடந்து வந்தது.

இந்நிலையில், அமெரிக்காவின் 20 அம்ச அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில், போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, இஸ்ரேலும், ஹமாசும் பிணை கைதிகள் மற்றும் உடல்களை ஒப்படைத்து வருகின்றன.

இந்நிலையில், காசாவில் மனிதாபிமான உதவிகளை செயற்படுத்துவது, காசாவின் பாதுகாப்பை உறுதி செய்வது, கூட்டு அமைதிப் படையை நிறுவுவது, அமெரிக்காவின் அமைதி திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இதற்காக அமெரிக்காவின் மேற்பார்வையில் ஒரு நிர்வாகத்தை அமைப்பதும் அமைதி திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதற்கு, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின் அங்கீகாரத்தை பெறும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

இதற்கிடையே ரஷ்யா சார்பில் பாதுகாப்பு கவுன்சிலில் மற்றொரு வரைவு தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், அமெரிக்கா தலைமையிலான சர்வதேச நிர்வாக திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிப்படை ஐ.நா.,வின் மேற்பார்வையின் கீழ் செயற்பட வேண்டும் எனவும், மேற்கு கரையையும், காசாவையும் பாலஸ்தீன அதிகாரத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இரத்தக் குழாய்க்குள் சென்று மருந்து வழங்கும்

# கடுகு விதையளவு ரோபோக்கள்

## சுவிஸ் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கம்

(சூரிச்)

நோயாளிகளின் இரத்தக் குழாய்களுக்குள் பயணித்து சிகிச்சையளிக்க உதவும் வகையிலான, கடுகு விதையளவே காணப்படும் ரோபோக்களை சுவிஸ் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

சுவிட்சர்லாந்தின் சூரிச்சில் உள்ள ETH பல்கலை ஆய்வாளர்களே இந்த மைக்ரோ ரோபோட்டை உருவாக்கியுள்ளார்கள். இரண்டு மில்லிமீற்றர் அகலமே கொண்ட இந்த ரோபோக்களை எளிதில் கட்டுப்படுத்தலாம்.

இந்த ரோபோக்கள், நோயாளிகளின் இரத்தக் குழாய்களுக்குள் பயணித்து, தேவையான மருந்துகளை பாதிப்பு ஏற்பட்டுள்ள இடத்துக்கே கொண்டு சென்று சிகிச்சையளிக்க உதவும்.

அதாவது, பக்கவாதம், புற்றுநோய் போன்ற நோய்களுக்கு அதிக அளவிலான, அதாவது high dose மருந்துகள் கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்த மருந்துகளை வாய்வழியாக கொடுக்கும் பட்சத்தில் அவை உடல் முழுவதும் பயணிப்பதால் கடுமையான பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆக, அத்தகைய மருந்துகளை இந்த ரோபோக்கள் மூலமாக, பாதிக்கப்பட்ட இடத்துக்கே அனுப்பும்போது, பக்க விளைவுகள் தடுக்கப்படக்கூடும்.

தெளிவாகக் கூறினால், நோயாளிக்குத் தேவையான மருந்து ஒரு கேப்சூலுக்குள் அடைக்கப்பட்டு இந்த ரோபோ உதவியுடன் அவரது உடலுக்குள் அனுப்பப்படும்.

அந்த கேப்சூலில் இரும்பு ஆக்சைட் நானோ துகள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ா பாதுகாப்பு சபையில்

# ங்கு போட்டியாக

# முன்வைத்த ரஷ்யா!



அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் இரு வரைவு தீர்மாணங்களும், நாளை ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில் வாக்கெடுப்புக்கு வர உள்ளன.

மொத்தமுள்ள 15 உறுப்பு நாடுகளில், குறைந்தது 9 நாடுகள் ஆதரவளிக்க வேண்டும்.

மேலும், நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவை தங்களிடம் உள்ள "வீட்டோ" அதிகாரத்தை பயன்படுத்தாமல் இருக்க வேண்டியது அவசியம்.

வீட்டோ அதிகாரம் உள்ள அமெரிக்கா, ரஷ்யா, தனித்தனியாக வரைவு தீர்மானம் கொண்டு வந்துள்ளதால், இரண்டுமே நிராகரிக்கப்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இது காசா சீரமைப்பு முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்கின்றனர் சர்வதேச வல்லுநர்கள். ( நி)


## தென் கொரியாவின் பிரபல ஆடை அலங்கார மையத்தில் தீ பரவல்




(சியோல்)

தென் கொரியாவின் தென் சங் சியோங் மாகாணம், சியோனான் நகரம், தொங்னாம்-கு, புசியோங்-ம்யோன் பகுதியில் அமைந்துள்ள பிரபல ஆடை அலங்கார மையத்தில் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தீ பரவல் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 6:10 மணியளவில் ஏற்பட்டுள்ளது.



தீ பரவல் அதிகரித்து வருவதால் இரண்டாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் அனைத்து தீயணைப்பு பிரிவினரும் அணிதிரண்டு தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (நி)



இணைக்கப்பட்டிருப்பதால், காந்த சக்தி உதவியால் அந்த கேப்சூல் நோயாளியின் உடலில் பாதிக்கப்பட்ட இடத்துக்கு கொண்டு செல்லப்படும்.

அந்த கேப்சூல் பாதிப்புக்குள்ளாகிய இடத்தை அடைந்ததும், உயர் அதிர்வலை காந்தப் புலத்தால் அது உருக வைக்கப்படும்.

கேப்சூல் உருகியதும் அதற் குள்ளிருக்கும் மருந்து வெளியாகி, பாதிக்கப்பட்ட இடத்தில் வேலை செய்ய ஆரம்பிக்கும்.

கால்நடைகள் உடலில் இந்த சோதனை முயற்சி வெற்றி பெற்றுள்ள நிலையில், அடுத்து மனித உடலில் சோதனை செய்யப்பட்டு இந்த சிகிச்சை முறை வெற்றி பெறுமானால், சில குறிப்பிட்ட நோய்களுக்கான சிகிச்சையில் அது முக்கிய திருப்புமுனையாக அமையும் என, சுவிஸ் நாட்டு ஊடகத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (நி)


## சீனாவில் 1,500 ஆண்டுகள் பழமையான யோங்கிங் கோயிலில் தீ பரவல்

(பீஜிங்)

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் அமைந்துள்ள 1,500 ஆண்டுகள் பழமையான யோங்கிங் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இக்கோயிலுக்குள் அமைந்துள்ள மூன்று மாடி மண்டபத்தில் கடந்த புதன் கிழமை காலை 11.24 மணியளவில் தீ பரவியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆலயத்தில் நபரொருவர் மெழுகுவர்த்தி தூபத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதாலேயே அங்கு தீ பரவியி



ருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

கோயில் மண்டபத்தில் பரவிய தீ, மண்டபத்தின் மரக் கூரைகள் வரை பற்றியெரிந்ததால் பாரிய கறுப்பு நிற புகை கிளம்பியது.

இந்நிலையில், அப்பகுதியிலிருந்த மக்கள் பாதுகாப்பு தேடி கோயில் வளாகத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடும் பணி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் இதுவரை விநியோகிக்க முடியாத சாரதி அனுமதி பத்திரங் களை அச்சிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

அச்சிடுவதற்கு அட்டைகள் இல்லாத மையால் சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்குவது நிறுத்தப்பட்டதுடன், அதற்கு பதிலாக, தற்காலிக சாரதி அனுமதி பத்திரம் வழங்கப்பட்டது.

அதன்படி, அச்சிடுவதற்கு கிடைக் கக்கூடிய சாரதி அனுமதி பத்திரங்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 50 ஆயி ரத்தை நெருங்கியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிடும் பணி மூன்று இடங்களில் மேற்கொள்ளப்படும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணை யாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள் ளார்.

அதன்படி, வேரஹெரவில் உள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களம், அம்பாந்தோட்டை மற்றும் அநுராத புரத்தில் உள்ள மையங்களிலும் இந்த பணிகள் முன்னெடுக்கப்படவுள் ளன.

அதற்கமைய, நாளாந்தம் சுமார் 6,000 சாரதி அனுமதி பத்திரங் களை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக வும் கமல் அமரசிங்க தெரிவித்துள் ளார்.

இவற்றில், ஒரு நாள் சேவையின் கீழ் 1,500 சாரதி அனுமதி பத்திரங் களும் சாதாரண சேவையின் கீழ் 4500 சாரதி அனுமதி பத்திரங்களும் வழங்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

அதன்படி, நிலுவையில் உள்ள சாரதி அனுமதி பத்திரங்களை அடு த்த இரண்டு வாரங்களுக்குள் அச் சிட்டு விநியோகிக்க முடியும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணை யாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர் காலத்தில் மேலும் ஒரு மில்லியன் சாரதி அனு மதி பத்திரங்களுக்கான அட்டைகள் நாட்டிற்கு இறக்குமதி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 14 1/2<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: BSC,MSc,QS<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16115 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3 இல் சூரி செவ்<br>கி.பா: 26 1/2<br>உயரம்: 5' 4"<br>தகைமை:தொழில்: MBBS<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/16130 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா: 25<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: Dip in media, Reporter<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி ,ஆசிரியர்<br>தொ.இ: B/16118 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: Dip in ICT<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தி யோகம்<br>தொ.இ: G/16134 |
| பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 45 1/2 2 இல் செவ்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:A/L,Ambulance Driver<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/16119 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2 இல் செவ்<br>கி.பா: 23<br>உயரம்: 5" 4"<br>தகைமை/தொழில்: BSC,PHD,QA<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/16137 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>உயரம்:6' 2"<br>தகைமை/தொழில்: O/L,Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16122 | பிறப்பு: 1987 RC<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: A/L, Care Taker<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16138 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 10 இல் சூரி செவ்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: BSC, MBA, Senior Marketing Executive<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16124 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 12 இல் சூரி செவ்<br>கி.பா: 03<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: MBBS<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: G/16142 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 485



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# எங்கே நிம்மதி?

ஒரு ஊரிலே ஒரு முனிவர் இருந்தார். நல்ல உபதேசம் செய்தார். அதிகமானோர் அவரைத் தேடிக்கொண்டு போவார்கள். அவர் சொல்லும் கருத்தையெல்லாம் கேட்டுக்கொண்டு வருவார்கள். மெய்ப்பொருள் உண்மைகளை எல்லாம் அவர் தினம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஒரு செல்வந்தர் தினமும் அவரிடம் போவது வழக்கம். முனிவர் சொல்வதையெல்லாம் ரொம்ப அக்கறையோடு கேட்டுக்கொண்டு இருந்தார். அவருக்கு மனசுக்குள்ளே ஒரு சந்தேகம். முனிவரிடம் நேரடியாவே அதைக்கேட்டுவிட்டார்.

“சுவாமி! நானும் ரொம்ப நாளாக நீங்க சொல்லும் தத்துவத்தையெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தும் உங்கள் முகத்திலே தெரிகிற அமைதி, தெளிவு, ஒளி, களங்கமில்லாத சிரிப்பு இதெல்லாம் என் முகத்திலே தெரியவில்லையே! அதற்கு என்ன காரணம்?” என்று கேட்டார்.

முனிவர் சிரித்தார். அந்த செல்வந்தரைப் பார்த்து, “மகனே! நீ மரண பயத்தை வெல்ல வேண்டும்! அப்பதான் அந்த நிலைமை உனக்கு வரும்!” என்றார்.

“அதை எப்படி வெல்வது? அதுக்கும் நீங்கதான் வழி சொல்ல வேண்டும்!” என்றார் இவர். முனிவர் சிந்தித்தார். இவருக்கு உண்மையை உணர்த்த வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டார். அவரைப் பார்த்து சொன்னார்.

“மகனே! இப்ப நான் உனக்கு ஒரு உண்மையை சொல்லப்போகிறேன் அதைக் கேட்டுவிட்டு அதிர்ச்சி அடையக்கூடாது. மனசை திடப்படுத்திக்கொள். இன்னும் 15 நாட்களிலே நீ சாகப்போகிறாய்! அதாவது வருகிற முழு நிலவு நாளன்று மாலை 6 மணிக்கு உனக்கு மரணம் சித்திக்கும்!” என்றார்.

செல்வந்தருக்கு “திடுக்” என்று தூக்கிப்போட்டது! அதிர்ச்சி! கொஞ்சநேரம் ஒண்ணுமே பேச முடியலே. மௌனமாக இருந்தார். அதன் பின்னர் ஒருவழியாக மனசை தேற்றிக்கெண்டு எழுந்தார்.

“சுவாமி! நான் இன்னும் 15 நாட்கள் தான் இருக்கப் போகிறேன். அதற்குள்ளே முடிக்க வேண்டிய குடும்பப் பொறுப்பு நிறைய இருக்கிறது! ஒழுங்கு செய்ய வேண்டிய கடமைகள் இருக்கிறது. அதனாலே நாளையிலிருந்து நீங்க இருக்கிற இந்த இடத்துக்கு என்னாலே வரமுடியாது! அதற்கு நேரம் இருக்காது! தயவு செய்து பொறுத்துக்கொள்ளுங்கள்” என்றார்.

“சரி” என்று சம்மதம் கொடுத்தார் முனிவர். செல்வந்தர் வேகமாக வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தார். அன்றிலிருந்து இரவு-பகல் இடைவிடாத உழைப்பு. கொடுக்கல் வாங்கல் எல்லாவற்றையும் சரி செய்தார். இருந்த நிலபுலனையெல்லாம் பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுத்தார்.

ஒரு வழியாக எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் விடுபட்டார். இவர் இப்படி விடுபடுவதற்கும் முனிவர் சொன்ன கெடு முடிவதற்கும் சரியாக இருந்தது.

இறப்பதற்கு இன்னும் 1 மணி நேரம்தான் இருக்கு. இதற்குள்ளே முனிவரைப் போய் பார்த்து விடை பெற்றுக் கொண்டு வரலாம் என புறப்பட்டார்.

போய் சேர்ந்தார். முனிவரைப் பார்த்தார். என்னப்பா! எப்படியிருக்கிறாய்? என்று கேட்டார் முனிவர். “சுவாமி! ஒரு வழியாக எல்லாக் கடமைகளையும் முடித்துவிட்டேன். எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து விட்டேன். இப்போது என் மனதிலே ஒன்றுமில்லை. வெட்ட வெளியாக இருக்கிறது. இறப்பதற்கு நான் தயார்!” என்று சொல்லிவிட்டு அமைதியாக சிரித்தார். முனிவர் புன்முறுவல்பூத்தார்.

“மகனே! இப்போது அந்த கண்ணாடியிலே உன் முகத்தை பார்!” என்றார். இவர் பார்த்தார். அந்த முகத்திலே அமைதி-தெளிவு-ஒளி - களங்கமில்லாத சிரிப்பு எல்லாம் தெரிந்தது. இது தானே ஆரம்பத்திலே இவர் கேட்டது. முனிவர் சொன்னார். ●

“மகனே! கோடி கொடுத்தாலும் இந்த செல்வம் உனக்குக் கிடைக்காது. உண்மையிலே உனக்கு ஆயுள் முடியவில்லை. மரண பயத்தை வெல்வது எப்படி என்பதை உனக்கு சொல்வதற்காகத்தான் இந்த சோதனை. அதிலே நீ தேறிவிட்டாய்” என்றார்.

இந்தக் கதையை சொன்னவர் பதின் கவனகர் (தசாவதானி) திருக்குறள் இராமையா அவர்கள். பற்று குறைய குறைய பயமும் குறையும் என்கிறார் அவர். அதனாலே மரண பயத்தை வெல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள் பொருள் மேலே இருக்கிற பற்றை முதலிலே வெல்ல வேண்டும்.

“யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்” -என்கிறார் திருவள்ளுவர். எது, எதிலிருந்து நீ விலகியிருக்கிறாயோ, அது அதிலே இருந்து உனக்கு துன்பம் இல்லை என்று அர்த்தம். அந்த திருக்குறளை சொல்லும்போது உதடு ஒட்டாது. அதுவே ஒரு சிறப்பு.

நிம்மதி எங்கே இருக்கும் என்று கேட்டால், பற்று எங்கே இல்லையோ அங்கேதான் நிம்மதி இருக்கும் என்று சொல்லிவிடலாம்.

எல்லாம் சரி... இந்த உலகத்திலே அப்படியே இருந்துவிடவும் முடியாது.

ஒரு கடை வைத்திருக்கிறவர், ஒவ்வொரு நாளும் இரவு கடையை மூடுவதற்கு முன்னால், அன்றைய வரவு-செலவு கணக்கை பார்த்து முடித்து விட்டு நிம்மதியாக தூங்கப் போக வேண்டும். அது போல வாழ்க்கை என்ற வரவு-செலவு கணக்கையும் ஒவ்வொரு நாளும் முடித்துக்கொள்ள வேண்டும். இன்றைய கடமையை இன்றைக்கே முடித்துவிட்டு நிம்மதியா தூங்கப்போகணும். நீண்ட நிம்மதியான தூக்கத்துக்கு இது ஒரு பயிற்சி என்று ஒரு நண்பரிடம் சொன்னேன்.

அவர், நான் கூட அப்படித்தான் சேர் செய்தேன்.. நேற்று கடையிலே நானே வரவு-செலவு கணக்கைப் பார்த்து முடிச்சேன். 520 ரூபா லாபம் கிடைத்திருந் தது. எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். இருந்தாலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை” என்றார்.

“ஏன் அப்படி?” என்று கேட்டேன். அதற்கு அவர், அந்தக் கடை எனக்கு சொந்தமில்லை சேர். நான் அதிலே வேலை பார்த்தவர்!” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெந்நீரின் மருத்துவ முக்கியத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

உடலில் நீரின் தொழிற்பாடுகள் மிகவும் அத்தியாவசியமானவை. சித்தமருத்துவத்தில் வெந்நீர் அருந்துவது சிறப்பானதாகவும் பத்தியத்திற்கு உரியதாகவும் மருத்துவப் பண்புகள் நிறைந்ததாகவும் கொள்ளப்படுகிறது.

பத்தியங்கள் தனித்தனியே நோய்களுக்கும் மருந்துகளுக்கும் நோயாளிக்கும் என குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எனினும் பொதுவான பத்தியங்களும் காணப்படுகின்றன. வெந்நீர் அருந்துதல் பொதுவான பத்தியமாகவும் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகவும் கருதப்படுகிறது.

"நெஞ்செரிப்பு நெற்றிவலி நீங்காப் புளியேப்பம்

வஞ்சமுற வந்த வயிற்றினோய்-விஞ்சியே

வீழாமக் கட்டோடு வெப்பிருமற் சுட்டநீர்

ஆழாக்குட் கொள்ள வறும்"

ஆழாக்களவு வெந்நீர் உண்டால் (எதிர்க்கின்ற உணவு) நெற்றிவலி, நீங்காத புளியேப்பம், குன்மம், சீதக்கட்டு, சுரம், காசம், அதாவது இருமல் இவை நீங்கும் என்று சித்தர் செய்யுள் தெளிவாக எடுத்தியம்புகிறது.

வெந்நீர் அருந்துவதனால் வயிற்றிலுள்ள நொதியங்களின் செயற்பாடுகளைத் தூண்டி சீரண சக்தியை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது.


எனவே குளிர்ந்த நீருடன் ஒப்பிடும் போது 25 வீதம் சீரண சக்தியை அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் வெந்நீருக்கு உண்டு.

இன்றைய ஆய்வுகளும் அதை ஏற்றுக் கொள்கின்றன. எனவே எண்ணைத் தன்மையான உணவுகளை நீங்கள் உட்கொண்டால் வெந்நீர் அருந்துவது சிறந்ததாகும்.

அடுத்ததாக சூடான நீர் அருந்தும் போது இரத்த நாளங்கள் விரிவடைகின்றன. மாறாக குளிர்ந்த நீர் அருந்தினால் இரத்த நாளங்களை சுருங்கச் செய்கின்றது.

இதனால் தான் அடிபட்ட இடங்களில் உடன் வீக்கம் ஏற்படும் போது ஐஸ்நீர் ஒற்றடம் கொடுக்கின்றோம், ஏனெனில் ஐஸ்நீர் இரத்த நாளங்களை சுருங்கச் செய்து இதனால் வீக்கம் கரைந்து வீக்கம் குறையக் கூடிய வாய்ப்புண்டு.

அதேபோல் நாட்பட்ட வீக்கங்களுக்கு வெந்நீர் ஒற்றடம் கொடுக்கும் போது



இரத்தநாளங்களை விரிவடையச் செய்து, வீக்கங்களை குறைக்கக்கூடிய தாகவும் உள்ளது.

வெந்நீர் அருந்தும் போது 15-20 வீதம் இரத்த நாளங்களை விரிவடையச் செய்யும். இதனால் தான் இருதய நோயாளிகளுக்கு சுடு தண்ணீர் அருந்துதல் சிபாரிசு செய்யப்படுகிறது.

சாதாரணமாக நாம் இரத்த நாளங்களை விரிவடையச் செய்ய நிறைய மாத்திரைகள் பயன்படுத்துகிறோம். ஆனால் சாதாரண வெந்நீருக்கு அப் பண்புகள் உண்டு. பொதுவாக எமது குடற் பகுதியில் இருக்கும் கலங்கள் நாம் சாப்பிடும் உணவுகளிலிருந்து சத்துக்களை உறிஞ்சி உடலிற்குள் அனுப்புகிறது. அதே போல் வெந்நீர் அருந்தும் போது அகத்துறிஞ்சும் வேகம் அதிகமாகிறது. ஏனெனில் Hot water mali cules vibrate faster என்று சொல்லப்படுகிறது.

அதாவது வெந்நீர் அணுக்கள் அதிகமான அதிர்வுகளைக் கொண்டது. அதிர்வுகள் அதிகமாக இருக்கும் போது அகத்துறிஞ்சப்படும் அளவும் அதிகரிக்கிறது. இதனால் சீரண உறுப்புக்கள் நன்கு செயற்பட்டு நாம் சாப்பிடும் உணவின் சத்துக்களும் சுலபமாக அகத்துறிஞ்சப்படுகிறது.

வெந்நீர் அருந்தும் போது மேலும் நம் உடலின் உட்புறவெப்பநிலை 0.5 பாகை செல்சியஸ் அதிகமாகிறது. உட்புற வெப்பநிலை அதிகரித்தால் எமது உடம்பின் எரிசக்தி அதாவது Basal Metabolic Rate (BMR) 10.30 வீதம் அதிகரிக்கிறது. இதனால் அதிகமான கலோரிகள் எரிக்கப்படுகிறது. இதனால் எமது இரத்தத்தில் சீனியின் அளவு சீராகிறது. அத்துடன் உடல் எடையை குறைக்க நினைப்பவர்களும் வெந்நீர் அருந்தலாம்.

அத்துடன் சில ஆராய்ச்சிகள் காலை உணவிற்கு பின் வெந்நீர் அருந்துவதனால் சிறுநீரகத்தின் செயற்பாட்டை 25 வீதம் அதிகரிப்பதாகவும் உறுதிப்படுத்துகிறது. ஆனால் 65 பாகை செல்சியசிற்கு மேல் கொதித்த வெந்நீர் அருந்தக் கூடாது. உடல் உள் உறுப்புக்களை பாதிக்கும். அதேபோல் பற்கூச்சம் போன்றவற்றையும் ஏற்படுத்தும். 70 பாகை செல்சியசிற்கு கொதித்த நீர் தொண்டையில் அலட்சியை ஏற்படுத்தும். 40-50 பாகை செல்சியசிற்குள் கொதித்த வெந்நீர் உடலிற்கு சிறந்தது. மேற்கூறிய அவ்வளவு மருத்துவக் குணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அதேபோல் இவ் வெந்நீருடன் துளசி, இஞ்சித் துண்டு அல்லது எலுமிச்சம் பழச்சாறு, தேன் போன்றனவும் கலந்து அருந்துதல் இன்னும் சிறப்பாகும். அதே போல் ஒரு நாளைக்கு 300-350 மில்லி அளவு வெந்நீர் அருந்தினால் போதுமானது. தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் இவ்வாறு அருந்தி வந்தால் சிறந்த பலன்களை அவதானிக்க முடியும்.

அத்துடன் வெந்நீர் அருந்துவதனால் தோல் ஆரோக்கியமும் மேம்படும். அத்துடன் மலச்சிக்கலையும் தடுக்க உதவுகிறது. எனவே மிதமான மற்றும் பொருத்தமான வெப்பநிலையில் சூடான நீரை உட்கொள்ளுதல் சிறந்ததாகும். வெந்நீரை அருந்தும் போது உடல் உட்புற வெப்பநிலை அதிகரித்து வியர்வை உண்டாக்கி உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற உதவுகிறது. வெந்நீர் அருந்துதல் பல நன்மைகளை வழங்குகிறது. எனவே தான் சித்தர்கள் குளிர்ந்த நீர், வெந்நீர், காய்ந்து ஆறிய நீர் என ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு தனிப்பட்ட குணங்களையும் நோய் தீர்க்கும் பண்புகளையும் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

இதனால்தான் சித்தர்கள் வெந்நீரின் மருத்துவப் பண்புகளையும் வெந்நீர், கால்கூறு-அரைக்கூறு காய்ந்த வெந்நீர், முக்கால் கூறு காய்ந்த வெந்நீர் என வகைப்படுத்தி தெளிவாக அதன் மருத்துவக் குணங்களையும் கூறியுள்ளார்கள். அதனால் தான் வெந்நீர் பத்தியத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

## இராசிபலன்

17.11.2025
கார்த்திகை 01, திங்கட்கிழமை
துவாதசி காலை 6.35 மணிவரை
சித்திரை முழுவதும்

சுப நேரம் 12.08-1.38 மணிவரை
இராகுகாலம் 7.38-9.08 மணிவரை
பிரதோச விரதம், ஐயப்பன் விரதாரம்பம்

சந்திராஷ்டமம்
பூரட்டாதி

வளவன்



மேஷம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவம் ஒன்று நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவார்கள்.



கடகம்

கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக உறவினர் உதவியை நாடுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், இல்லத்தில் இனிய சம்பவங் கள் நடைபெறும் வாய்ப் புண்டு.



துலாம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.



மகரம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.



ரிஷபம்

தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகம் கூடும், சந்தோசம் அதிகரிக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.



சிம்மம்

சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாகச் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.



விருச்சிகம்

பிரபலமானவரின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள்.



கும்பம்

அலுவலக பணிகள் துரிதமாக நடைபெறும், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலன் சீராகும், விருந்தினர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



மிதுனம்

நன்மைகள் நாடி வரும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள்.



கன்னி

வங்கி சேமிப்பை உயர்த்த முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கை கூடும்.



தனுசு

பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.



மீனம்

தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, திடீர் செலவுகள் இடம் பெறலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

வேலை செய்யவில்லையானால் வாழ்வு புனிதமாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 911





"ஆம் மகளே! அந்தப் பேய் என்னைப் பார்த்த பார்வையை என்னால் சகிக்க முடியவில்லை. அதனால் விளக்கை எடுத்து எறிந்தேன்!" என்றார் சுந்தர சோழர்.

"தந்தையே! பேயுமல்ல ஆவியும் அல்ல உயிரோடிருக்கும் மாதரசியேதான். அப்பா! பெரியம்மா சாகவே இல்லை! முதன் மந்திரியைக் கேளுங்கள்! எல்லாம் சொல்லுவார்!" என்று குந்தவை கூறிவிட்டு, மந்தாகினியும் பூங்குழலியும் மௌன வாக்குவாதம் செய்து கொண்டிருந்த காட்சியைப் பார்த்தாள். உடனே அந்த இடத்துக்குப் பாய்ந்து சென்றாள்.

"மகளே! அவளிடம் போகாதே! அந்த ராட்சஸி உன்னை ஏதாவது செய்து விடுவாள்!" என்று சுந்தர சோழர் கூவிக் கொண்டே குந்தவையைத் தடுப்பதற்காகப் படுக்கையிலிருந்து பரபரப்புடன் எழுந்திருக்க முயன்றார்.

மலையமான் மகள் வானமாதேவி அவருடைய தோள்களை ஆதரவுடன் பிடித்துப் படுக்கையில் சாயவைத்தாள். "பிரபு! சற்றுப் பொறுங்கள்! தங்கள் திருமகளுக்கு அபாயம் ஒன்றும் நேராது!" என்று கூறினாள்.

## அத்தியாயம் 33
## "சோழர் குல தெய்வம்"

குந்தவை தன் அருகில் வந்ததும் மந்தாகினி அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள். அப்போது யாரும் எதிர்பாராத ஒரு காரியத்தை இளையபிராட்டி செய்தாள். தரையில் விழுந்து மந்தாகினியின் பாதங்களைத் தொட்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தாள். மந்தாகினியின் கண்களில் கண்ணீர் பெருகிற்று.

அவள் குனிந்து குந்தவையைத் தூக்கி எடுத்து அணைத்துக் கொண்டாள். பிறகு இளைய பிராட்டி அவளுடைய ஒரு கையைத் தோள் வரையில் சேர்த்துத் தன் கையினால் தழுவிப் பிணைத்துக் கொண்டு சக்கரவர்த்தி படுத்திருந்த இடத்தை நோக்கி வந்தாள். சக்கரவர்த்தினி இப்போது தான் மந்தாகினியின் முகத்தை நன்றாகப் பார்த்தார். அவளுடைய நெற்றியிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்டார்.

"சுவாமி! தாங்கள்தான் விளக்கை எறிந்து காயப்படுத்தி விட்டீர்களா? ஐயோ! என்ன காரியம் செய்தீர்கள்?" என்று மலையமான் மகள் அலறினாள்.

"இல்லை, இல்லை! நான் எறிந்த விளக்கு இவள் பேரில் விழவே இல்லை. அதற்கு முன்னாலேயே இவள் இரத்தக் காயத்துடன் வந்து நின்றாள். ஆனால் இந்தப் பாதகி என் பேரில் பழி சொன்னாலும் சொல்லுவாள்! நீங்களும் நம்பி விடுவீர்கள். நீங்கள் எல்லோருமே அவளுடைய பட்சத்தில் இருக்கிறீர்கள். மலையமான் மகளே! இவளிடம் நீ கூடப் பரிதாபப் படுகிறாயே? இவள் யார் என்பது உனக்குத் தெரியுமா?" என்று சுந்தர சோழர் கேட்டார்.

"தெரியும், சுவாமி! இவர் என் குலதெய்வம் சோழர் குலத்துக்கே தெய்வம். என் அருமை மகன் காவேரியில் மூழ்கிப் போய் விடாமல் காப்பாற்றிக் கொடுத்த தெய்வம் அல்லவா?"

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## தண்டனையில் பங்கு உண்டா?



காட்டில் பதுங்கியிருந்து, அவ் வழியாகப் போவோர் வருவோரிடம் பணம் நகைகளை கொள்ளை அடித்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

அதை அறிந்த பெரியவர் ஒருவர், கையில் பணப் பையோடு காட்டு வழியாகச் சென்றார்.

அவரை மறித்து நிறுத்தினான் கொள்ளைக்காரன். அவனைப் பார்த்து பெரியவர், "அப்பா, பணப் பையை உனக்கே தந்து விடுகிறேன்.

எனக்கு ஒரு சந்தேகம். அதைத் தெரிவித்து விட்டுப் பணப் பையை எடுத்துக்கொள். அதுவரை நான் இங்கேயே இருப்பேன்" என்றார்.

"உமக்கு என்ன சந்தேகம்?" என்றான் திருடன். "நீ கொள்ளையடித்து உன் குடும்பத்தினரைக் காப்பாற்றுகிறாயே! உனக்குக் கிடைக்கும் தண்டனையில் (பாவத்தில்) அவர்கள் பங்கு கொள்வார்களா? அதைத் தெரிந்து வந்து சொல்" என்றார் பெரியவர்.

கொள்ளைக்காரன் குடும்பத்தாரிடம் சென்று, "நான் கொள்ளையடித்துக் கொண்டு வந்து தருகிறேன். நீங்கள் உண்டு? சுகமாக இருக்கிறீர்கள், எனக்கு ஏற்படக் கூடிய பாவத்தில் (தண்டனை) உங்களுக்குப் பங்கு உண்டா? ஏற்பீர்களா?" என்று கேட்டான்.

"அது எப்படி முடியும்? உன் தண்டனை உன்னோடுதான்! நீ கொண்டு வந்து தருகிறாய் நாங்கள் அதை அனுபவிக்கிறோம்" என்று கூறினர்.

அப்பொழுதே, கொள்ளைக்காரனுக்கு அறிவு வேலை செய்யத் தொடங்கி விட்டது.

பெரியவரிடம் வந்து வணங்கி, "உங்களுடனே நான் வருகிறேன்!" என்று கூறி, பெரியவரைப் பின் தொடர்ந்தான் கொள்ளைக்காரன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக் கொள்ளுங்கள். – அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# இருக்கும் இடம் விட்டு இல்லாத இடம் தேடும்...

எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளிடம் ஒற்றுமை மட்டுமல்ல. ஆன இராஜதந்திரமும் இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மை. எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளைத் தமிழ் மக்கள் மலையாக நம்பினர்.

இருந்தும் தங்களை நம்பிய தமிழ் மக்களுக்குத் தமிழ் அரசியல்வாதிகள் நம்பிக்கைத் துரோகம் செய்தனர்.

இத்தகைய துரோகத்தைச் செய்தும் செய்வித்தும் கொண்டவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தர் என்ற உண்மை ஒருபோதும் மறக்கக்கூடியதன்று.

உண்மையில் தமிழ் அரசியல் தலைவர்களில் சர்வதேசத்தின் உதவியைப் பெற்று தமிழ் மக்களின் உரிமையை மீட்டெடுக்கின்ற அருமந்த சந்தர்ப்பம் இரா.சம்பந்தர் அவர்களுக்கு மட்டுமே கிடைத்தது.

அதாவது தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் போன்ற தமிழ்த் தலைவர்களுக்குக் கிடைக்காத சந்தர்ப்பம் இரா.சம்பந்தருக்குக் கிடைத்திருந்தது.

அதிலும் குறிப்பாக பாரதப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கின்ற வாய்ப்பு எங்களுக்கான அருமந்த கிடைப்பனவாக அமைந்திருந்தது. தவிர, வெளிநாட்டுத் தூதுவர்கள் இரா.சம்பந்தரைத் தேடித் தேடிச் சந்தித்தனர்.

அந்தச் சந்திப்புக்குள் போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணையை சம்பந்தர் வலியுறுத்துவார் என்ற எதிர்பார்ப்பு வெளிநாட்டுத் தூதுவர்களிடம் இருந்தது.

ஆனால் அவற்றையெல்லாம் நிர்மூலமாக்கி, மகிந்த ராஜபக்ஷவுக்கு விசுவாசமாக இருப்பதிலேயே சம்பந்தர் ஆர்வம் காட்டினார்.

அவரின் நோக்கமெல்லாம் தனக்கான எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் தான் வதியும் சகல வசதிகளையும் கொண்ட மாளிகையுமாகவே இருந்தது.

இதன் காரணமாக, இனி இவர்கள் எந்த அவதாரத்தை எடுத்தாலும் அவர்களை நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை.

இதை நாம் கூறும்போது, அப்படியானால் புதியவர்கள் அரசியலுக்குள் நுழைந்தால் அவர்கள் மீது நம் மக்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்களா? என்ற கேள்வி எழும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனித்தாக வேண்டும். தமிழ் அரசியல் என்பது புதியவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனினும் புதியவர்கள் தங்களின் நேர்மையை – தமிழ் மக்களுக்காகத் தாங்கள் அர்ப்பணிப்போடு செயலாற்றுவோம் என்பதை நிரூபித்தாக வேண்டும். இதற்காக அவர்கள் களத்தில் இறங்கிக் கடுமையாகப் பாடுபட வேண்டும்.

இதைச் செய்வதற்கான காலம் கடந்து செல்கிறதாயினும் ஒரு சிறுவாய்ப்பு மட்டுமே இப்போது எஞ்சியுள்ளது.

அது எதுவெனில், உலகம் முழுவதும் போற்றுகின்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நம்புவதும் அந்த நம்பிக்கையை அவருக்குத் தெரியப்படுத்துவதும் அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்புகளைத் தோற்றுவித்து அதன் மூலம் எங்கள் இலக்கை அடைவதுமே ஒரே வழியாகும்.

எனினும் அதைச் செய்வதற்கு தொல்.திருமாவளவன் போன்ற தி.மு.க மற்றும் காங்கிரஸ் ஆதரவுக்குரிய – பிரதமர் மோடிக்கு எதிரானவர்களுடன் கைகோர்ப்பதும் அவர்களை நம்புவதும் ஆரோக்கியமானதல்ல. அது எங்களின் எதிர்காலத்துக்கான இராஜதந்திரமுமல்ல.

ஆம். இருக்குமிடம் விட்டு இல்லாத இடம் தேடுவது எந்தவகையிலும் ஏற்புடையதன்று.

# பல்கலை மாணவர்களுக்கு போதைவஸ்து விற்பனை

## இரண்டு பேர் கைது

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதைப் பொருள் வழங்கிய குற்றச்சாட்டில் இருவரை நுகேகொடை வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஒரு சில மாணவர்களுக்கும் போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும் அந்த இரு நபர்களும் ஹெரோயின் போதைப் பொருளை வழங்கி வந்துள்ளனர்.

குறித்த இருவரது உடைமையில் இருந்து 10 கிராம் 900 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள ஆண்கள் விடுதி அருகே சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் நடமாடுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள வீதியில் காத்திருந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீண்ட காலமாகப் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் போதைப்பொருட்களை வழங்கி வருபவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# சட்ட விரோதமாக ஆட்டோ ஓடும் சுற்றுலாவிகள்

## பொலிஸார் கடும் எச்சரிக்கை

இலங்கையில் செல்லுபடியான சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது தமது சொந்த நாட்டின் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத வெளிநாட்டவர்கள் எந்தவொரு வாகனத்தையும் ஓட்டுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ.வூட்லர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் சட்டவிரோதமாக முச்சக்கர வண்டிகளை ஓட்டிச் செல்லும் போக்கு அதிகரித்து வருவதை பொலிஸார் அவதானித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இது சட்டவிரோதமானது என்றும் இந்த வாடகை வாகனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் பயணிகள் என அனைவரும் நாட்டில் வாகனங்களைப் பயன்படுத்தும்போது இலங்கையின் மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்குக் கண்டிப்பாகக் கட்டுப்பட வேண்டும்.

செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இல்லாமல் வெளிநாட்டவர்கள் பலர் வாகனம் ஓட்டுவது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

# சிறிய ரகத் துப்பாக்கியுடன் தொழிலதிபர் கைது

நீர்கொழும்பு, குரன பகுதியில் உள்ளங்கையில் மறைத்து வைக்கக் கூடிய சுமார் 6 அங்குல நீளமுள்ள சிறிய துப்பாக்கியுடன் தொழிலதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த துப்பாக்கி பெல்ஜியத்தில் தயாரிக்கப்பட்ட பிரவுனிங் வகை எனத் தெரியவந்துள்ளது.

வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் தொழிலதிபர் ஒருவரிடம் துப்பாக்கி இருப்பதாகக் கொழும்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த நபரின் வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்ட போதே துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அவரது தந்தையிடமிருந்து இதைப் பெற்றதாகவும் தந்தை தற்போது உயிருடன் இல்லை எனவும் கூறியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# பயன்மிகு தென்னைகளை நாசமாக்கும் காட்டு யானைகள்

## பொதுமக்கள் விசனம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மணியங்குளம் கிராமத்தில் இரவு வேளைகளில் தொடர்ச்சியாக நுழையும் காட்டு யானைகளால் தென்னை மரங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டு வருவதாகப் பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவும் காட்டுயானை ஒன்று 13 இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை அழித்து நாசம் செய்துள்ளது.

கடந்த ஒரு மாத காலப் பகுதியில் மாத்திரம் தமது கிராமத்தில் 80 இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களைக் காட்டுயானைகள் அழித்துள்ளன எனக் கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே தமது உயிரகளையும் உடைமைகளையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க உரிய அதிகாரிகள் உடனடியாகக் கிராமத்தின் எல்லைப் பகுதிகளில் யானை வேலி அமைத்துத் தர வேண்டும் எனக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-7,316)

# யாத்திரிகர்கள் பயணித்த பேருந்தில் திடீர் தீ

கம்பளையிலிருந்து அநுராதபுரம் நோக்கி யாத்திரிகர்கள் பயணித்த சொகுசு பேருந்தொன்று நேற்றுக் காலை கல்குளம் பிரதேசத்தில் திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தத் தீ விபத்தின் போது பேருந்தில் சாரதி மற்றும் உதவியாளர் உட்பட சுமார் 12 பேர் இருந்ததாகவும் அவர்களில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் தீ விபத்தில் பேருந்து பலத்த சேதமடைந்துள்ளது.

யாத்திரிகர்களின் அலறல் சத்தம் கேட்டு அப்பகுதிவாசிகளும் பொலிஸாரும் இணைந்து பேருந்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இருப்பினும், பேருந்தில் இருந்த பயணிகளின் உடைமைகள் பல தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

பேருந்தில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ந-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2025**

“பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது”



[illegible] (ரோமானிய கத்தோலிக்க மதகுரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல் 01

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கை கைச்சாத்திட்டுள்ள பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் அகற்றுவது தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தின் மூலம் பெண்களின் சமமான அரசியல் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் செயல்வலுவிலுள்ள சட்டத்திற்கமைய பெண்களுக்கும், ஆண்களுக்குச் சமமான சந்தர்ப்பம் மற்றும் உரிமைகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் நடைமுறையில் பெண்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டுள்ளனரென விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆணாதிக்க சமூகத்தினுள் ஆணாதிக்க சிந்தனை மற்றும் தீர்மானங்களுக்கிடையில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய இடம் கிடைப்பதில்லையென்ற கருத்து தெரிவிக்கப்படுவதையும் அவதானிக்க முடியும்.

பெண்களின் உரிமை தொடர்பாக கலந்துரையாடப்படுகின்ற போதிலும் பெண்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்காக குறிப்பாக அரசியல் துறையில் பெண்களை வலுவூட்டுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகுமெனவும், அதிலிருந்து குறிப்பிடத்தக்க பயன்கள் கிடைப்பதில்லையெனவும் ஆய்வறிக்கைகள் மூலம் தெரியவருகின்றது.

## உலக அரசியலில் பெண்களின் பங்கு

ஐ.நா தகவலின்படி, செப்ரெம்பர் 12, 2025 நிலவரப்படி, 29 நாடுகளில் 32 பெண்கள் நாட்டின் தலைவராகவும் அல்லது அரச தலைவராகவும் பணியாற்றுகின்றனர். சில நாடுகளில் பெண்கள் இரு பதவிகளிலும் உள்ளனர். தற்போதைய விகிதத்தில் பார்ப்போமானால் அதிகாரத்தின் மிக உயர்ந்த பதவிகளில் பாலின சமத்துவம் இன்னும் 130 ஆண்டுகளுக்கு எட்டப்படாது என்று கூறப்படுகிறது.

ஐ.நா பெண்களால் முதல் முறையாக தொகுக்கப்பட்ட தரவுகளின்படி, 1 ஜனவரி 2023 இல் அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சரவை (Cabinet) உறுப்பினர்களில் 22.9 சதவீதத்தை பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 9 நாடுகளில் மட்டுமே பெண்கள் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அமைச்சரவை (Cabinet) அமைச்சர்கள் பதவிகளை வகிக்கின்றனர்.

பெண்கள் மற்றும் பாலின சமத்துவம், குடும்பம் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள், சமூக உள்ளடக்கம் மற்றும் மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் விவகாரங்கள் போன்றவற்றை கையாளும் திணைக்களங்களே பொதுவாக அமைச்சரவை அமைச்சர்களால் கையாளப்படுகின்றன.

1995 இல் 11 சதவீதமாக இருந்த நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் வீதம் தற்போது 27.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. ருவாண்டா (64 %), கியூபா (56%), நிகரகுவா (55%), மெக்சிகோ (50%), அந்தோரா (50%) மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (50%) ஆகிய ஆறு நாடுகளில் மட்டுமே 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் நாடாளுமன்றத்தில் உள்ளனர்.

ஐரோப்பாவில் 9 நாடுகள், ஆப்பிரிக்காவில் 5 நாடுகள், லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனில் 6 நாடுகள் மற்றும் ஆசியாவில் ஒரு நாடு உட்பட 21 நாடுகளில் பெண் உறுப்பினர்களின் வீதம் 40 சதவீதத்தை எட்டியுள்ளன அல்லது தாண்டியுள்ளன.

உலகளவில், 10 சதவீதத்துக்கும் குறைவான பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடுகள் 21 உள்ளன. இவற்றுள் நாடாளுமன்றத்தில் பெண்களே இல்லாத நாடுகளும் அடங்கும்.

145 நாடுகளின் தரவுகளின்படி, உள்ளூராட்சி சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பெண்கள் கிட்டத்தட்ட 3 மில்லியன் (35.5 சதவீதம்) பேர் என்று காட்டுகிறது. இரண்டு நாடுகள் மட்டுமே 50 சதவீதத்தை எட்டியுள்ளன, கூடுதலாக 26 நாடுகளில் , உள்ளூராட்சி நிர்வாகத்தில் 40 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் உள்ளனர்.

உலகின் பெரும்பாலான நாடுகள் பாலின சமத்துவத்தை அடையவில்லை என்றாலும், பாலின இட ஒதுக்கீடுகள் பல ஆண்டுகளாக முன்னேற்றத்திற்கு கணிசமாக பங்களித்துள்ளன. சட்டமியற்றப்பட்ட வேட்பாளர் இட ஒதுக்கீட்டைக் கொண்ட நாடுகளில், அத்தகைய சட்டம் இல்லாத நாடுகளுடன் ஒப்பிடுகையில், பெண்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றங்களில் 5% உம் உள்ளூராட்சி சபைகளில் 7% உம் ஆகவுமாக உள்ளது.

அரசியல் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பெண்களின் தலைமைத்தும் மேல் நிலையில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, இந்தியாவில் பஞ்சாயத்துகள் (உள்ளூர் கவுன்சில்கள்) பற்றிய ஆய்வில் ஆண்கள் தலைமையிலான கவுன்சில்களைக் காட்டிலும் பெண்கள் தலைமையிலான கவுன்சில்கள் உள்ள பகுதிகளில் குடிநீர்த் திட்டங்களின் எண்ணிக்கை 62 சதவீதம் அதிகம் என்று கண்டறியப்பட்டது. இதே போல் நோர்வேயில், முனிசிபல் கவுன்சில்களில் பெண்களின் இருப்பு மற்றும் குழந்தை பராமரிப்புக்கு இடையே நேரடியான தொடர்பு இருப்பதும் கண்டறியப்பட்டது.

## தெற்காசிய பெண் தலைவர்கள்

**சிறிமாவோ பண்டாரநாயக்கா:-**

சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது கணவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொல்லப்பட்ட பின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். அவர் தனது 44 வயதில், ஜூலை 21, 1960 இல் முதன் முறையாக பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இலங்கையின் பிரதம மந்திரியாக மூன்று முறை, 1960-1965, 1970-1977 மற்றும் 1994-2000 ஆகிய காலப்பகுதிகளில் பதவியில் இருந்தவர். இவரே உலகிலேயே முதலாவது பெண் பிரதமருமாவார். இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தவர்.

**இந்திரா காந்தி**

இந்திரா காந்தி (இந்திரா பிரியதர்சினி காந்தி) இந்தியாவின் மூன்றாவது பிரதமரும், ஒரே இந்திய பெண் பிரதமரும் ஆவார். அவர், இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேருவின் ஒரே மகளும் ஆவார். இந்தியாவின் இரண்டாவது பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரியைத் தொடர்ந்து சில நாட்கள் தற்காலிகப் பதவி வகித்த குல்சாரிலால் நந்தாவுக்குப் பின்னர் (தனது 49வது வயதில்) ஜனவரி 19, 1966இல், பிரதம மந்திரியாகப் பதவியேற்ற இவர் மார்ச் 24 1977 வரை பதவியில் இருந்தார்.

1977-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும் தோல்வியடைந்த இவர் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார். 14 ஜனவரி 1980-இல் பிரதமராக மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்ட இவர் 1984-இல் கொலை செய்யப்படும் வரை பதவியில் இருந்தார்.

ஆணாதிக்க மனப்பாங்கைக் கொண்ட இந்திய சமுதாயத்தில், ஒரு பெண்ணிடம் எதிர்பார்க்கப்படும் தன்மைகளுக்கு மாறாக வலுவான அதிகார பலத்துடன் மிகவுயர்ந்த பதவியிலிருந்து நாட்டை வழி நடத்தினார்.

**பெனசீர் பூட்டோ**

பெனசீர் பூட்டோ பாகிஸ்தானில் மத்திய-இடது அரசியல் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக இருந்த ஒரு பாகிஸ்தான் அரசியல் வாதியாவார்.

தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா...

யோகபூர்வ விஜயமாக இந்தியா செல்ல வுள்ளார்.

குறித்த விஜயமானது டிசம்பர் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்விஜயத்தின்போது டில்லியில் ரில்வின் சில்வா தலைமையிலான ஜே.வி.பியின் உயர்மட்டக் குழு பல் வேறு அரசியல் சந்திப்புக்களில் ஈடு படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் எதிர்க்கட்சித் தலை வர் சஜித்தும் இந்தியாவில் உயர் மட்டக் கலந்துரையாடல்களில் ஈடு பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வடக்கில்...

மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வருகின்ற கனமழை எதிர் வரும் 3 நாட்களுக்கு நீடிக்கும் வாய்ப் புள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புவியியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

நிலவும் மழையுடனான வானிலை குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை தொடர்ச்சியாக மழை கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி வரை யான 36 மணி நேரக் காலப் பகுதியில் பல பகுதிகளுக்கும் சராசரியாக 125 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது.

இந்த நிலைமை இன்னமும் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என்பதனால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. அந்தவகையில் யாழ்ப் பாண மாவட்டத்தினுடைய தாழ்நிலப் பகுதிகள், குறிப்பாக யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் உள்ள மக் கள் அவதானமாக இருக்க வேண் டும்.

மீண்டும் எதிர்வரும் 23ஆம் திகதி யிலிருந்து 28ஆம் திகதி வரையும் வங்காள விரிகுடாவில் புயல் ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்பு காணப் படுவதால் அக்காலப் பகுதிகளிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கன மழையைப் பெறும்.

வடகீழ்ப் பருவக்காற்று இன்னமும் உச்சம்பெறவில்லை. பருவ மழைக்கான காலம் இன்னமும் போதுமானதாக உள்ளது. எதிர்பார்க்கும் மழை கிடைக் கும் எனத் தெரிவித்துள்ளார். (ந-7,33)

## வல்வெட்டித்துறை...

மனோகரதாஸ் ஊடாக குறித்த பரிசுத் தொகை வெல்லப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ந-7)

## ஐயப்ப யாத்திரி...

எச்சரிக்கையுடன் செயற்படுமாறு கோரப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தின் பல பகுதி களில் மூளையைத் தாக்கும் அமீபாத் தொற்று (அமீபிக் மெனிங்கோஎன் செபாலிடிஸ்) இனங்காணப்பட்டு வரும் நிலையிலேயே குறித்த எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ந-7)

## கிராம உத்தி...

துப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத் தல் வேண்டும்.

வயதெல்லை 21 தொடக்கம் 35 வயதுவரை. இம்மாதம் 24ஆம் திக திக்கு முன்பாக விண்ணப்பங்கள் ஏற் றுக் கொள்ளப்படும். (ந-7)

## போதைவஸ்துக்...

உருவாகியுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

வடமாகாணத்தில் இளைய சமுதா யத்தினரின் வெளிநாட்டுப் புலம் பெயர்வு அதிகரித்துள்ளது.

இது பாரிய தாக்கங்களை ஏற் படுத்தியுள்ளது. இவ்வாறான நிலை தொடர்ந்தால், வடக்கு விரைவில் பாலைவனம் போன்று காட்சியளிக் கும் நிலைக்குத் தள்ளப்படும்.

ஆகவே வடமாகாணத்து மக்களின் பாதுகாப்பை உறுதி செய்து அந்தப் பிரதேசங்களைத் துரித அபிவிருத்தியை நோக்கி நகர்த்த வேண்டும் எனவும் அமைச்சர் தெரி வித்தார். (ந-7)

## அரசாங்கம்...

சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள் ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாப கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத் தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி யின் வேகத்தை அதிகரிக்க வேண் டிய தேவைப்பாடு காணப்படும் நிலை யில், இன்று நமது நாடு சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை யும் தாண்டி இலாபத்தை ஈட்டியுள் ளது.

எனவே தொழில்முனைவோர், தொழிற்றுறையினர், சேவைகள், நிர்மாணத்துறை களை வலுப் படுத்த வேண் டியிருப்பதால், சர்வதேச நாணய நிதியம் விதித்த இலக்கை விட அதிகமாக ஈட்டப் பட்ட மேலதிக 0.9% இலா பத்தை துறை களை மேம் படுத்துவதற்குப் பயன்படுத்த வேண் டும்.

இந்த நிதி யைத் திறை சேரியை நிரப்ப மட்டும் பயன் படுத்தாமல், நாட்டு மக்களுக் காக முதலீடு செய்யலாம், வரிச் சலுகைகளை வழங்கலாம், வீட்டு வசதிகள் போன்ற கனவைக் கூட நனவாக்கிக் கொள்ள சந்தர்ப் பத்தை ஏற்படுத் திக் கொடுக்க லாம்.

அதேநேரம், 2028 ஆம் ஆண் டுக்குள் கட னைத் திருப்பிச் செலுத்த விரை வான பொருளா தார வளர்ச்சி தேவையாகக் காணப்படுகின் றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## வெளிநாட்டு யுவதிக்கு தொல்லை கொடுத்த இளைஞன் கைது

அம்பாறை, திருக்கோவில் பகுதி யில் வெளிநாட்டு யுவதி ஒருவருக்குப் பாலியல் தொந்தரவு செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தேடப் பட்டு வந்த இளைஞன் கைது செய்யப் பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பகுதியில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

23 வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள தாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

முன்னதாக, பாலியல் தொந்தர வில் ஈடுபட்டதாகக் குறித்த யுவதியி னால் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்யப்பட்ட காணொளி சமூக ஊடகங்களில் பாரிய அதிர்வலை களை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக் கது. (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2025.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 6015
T 1 6 5 2 9 5
அத சம்பத T 5 2 9 5
சீட்டிழுப்பு இலக்கம் 0590
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.11.16
0131
மீனம் 03 26 67
3754

தன நிதானய
திகதி - 2025.11.16
சீட்டிழுப்பு இலக்கம் - 2045
V 06 28 49 67 V

மெகா பவர்
திகதி 16/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2363
V 22 09 23 30 41

ஜய ஜய
திகதி 2025.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 0283
N 0 3 9 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4257
சீட்டிழுப்பு திகதி 16.11.2025
Q 27 44 54 57
Q

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 1324
தனுசு 19 27 53 54 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
16.11.2025 வெற்றி வாரம் 0723
Z 2 5 6 9 1 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,765,244.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2989
சீட்டிழுப்பு திகதி 2025.11.16 தினம் ஞாயிற்றுக்கிழமை
06 08 28 74 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,471,312.80

சனிதா
திகதி 16.11.2025 வெற்றி வாரம் 5150
23 34 45 49 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,905,732.80

சசிரி
வெற்றி வாரம் 819
சீட்டிழுப்பு திகதி 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை
02 04 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4701
சீட்டிழுப்பு திகதி 16.11.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
01 45 54 57 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,266,326.80

லக்பதி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 37 06 27 44 47
2165
16.11.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.607,592,854.80

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2815
சீட்டிழுப்பு திகதி: 2025.11.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,168,052.00
07 42 53 54 K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல சூழலில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(5913)

071 016 9768, 076 481 1296
076 917 0364, 077 437 0882

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4345)

076 825 7716 (ஆகாஸ்)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## மாப்பிள்ளை தேவை

01) வவுனியா - சில்லாலை, இந்து, 1993, திருவாதிரை, Bsc in civil Engneering, Australia, Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54933
02) நல்லூர், இந்து, 2000, உத்திராடம், BBA Auditor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54571
03) யாழ்ப்பாணம், 1996, இந்து, அத்தம், MBBS, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54562
04) கோப்பாய், இந்து, 1997, ரோகினி, Masters in Businees Administration, Bank Exective officer பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54271
05) சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Bsc in IT, Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54241
06) கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Biochemistry, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54321
07) பருத்தித்துறை - யாழ்ப்பாணம், இந்து, 1994, விசாகம், 7 செவ்வாய், A/L, Diploma, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54171
08) வட்டுக்கோட்டை, இந்து, 1995, திருவாதிரை, 7 செவ்வாய், U/Y Degree, Canada, Citizen, Vagitiarion பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 32804
09) கைதடி - மன்னார், Roman cathalic, 1993, A/L, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 46691
10) கொழும்பு, Roman cathalic, 1992, Diploma in IT, Project Manageer, Divorce, Singapore பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 39596

எம்மிடம் Roman Catholic மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு.
நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (1712)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## வேலைவாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| Light Vehicle Driver | : | 0772290222 |
| Female Warden | : | 0776931291 |
| Collection Officer | : | 0772349939 |
| IT Officer | : | 0772290222 |
| Clerk | : | 0755489898 |
| Barman/Waiter | : | 0707896621 |
| பொதி சுமப்பவர் | : | 0777110075 |
| Room Attendent | : | 0707896621 |
| Granite & Tile Workers | : | 0773580547 |
| காசாளர் | : | 0766292830 |
| Graphic Designer | : | 0771659845 |
| Receptionist(vavuniya) | : | 0773501095 |
| Data Entry Operator | : | 0705050009 |
| Voice Over,Video Creator | : | 0767042891 |
| Sales Executive | : | 0779348512 |
| Accountant | : | 0761287897 |
| தோட்ட உதவியாளர் | : | 0771386954 |
| Marketing Executive | : | 0772025118 |
| இறைச்சி மீன் வெட்டுபவர் | : | 0706053194 |
| Marketing Executive | : | 0704141333 |
| Business Manager | : | 0721392593 |

(5922)

வேலைவாய்ப்பு வட்சப் குருபல் இணைய மற்றும் மேலதிக
யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :
dewmasweb.com

வேலையாட்கள் தேவையா?
0777733368

DEWMAS, 51, Amman Road, Nallur

Tamil Medium — வெளிவந்து விட்டது — English Medium

## கணிதம்

தரம் - 06
சுயகற்றல் கையேடு
புதிய பாடத்திட்டம் - 2026
பிரபல புத்தகசாலைகளில்.....
ஆசிரியர்கள்
V.குகநாதன் S.V.பாலமுரளி
Yaarl Nagar Maths Circle
(C-4342)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- 50,000/-
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4344)

V2 TRAVELS 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2430/- |

- குறைந்த விலை - நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4344)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2160/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2280/-


எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணில் 14.12.1934 — விண்ணில் 16.10.2025



மண்ணில் 11.12.1953 — விண்ணில் 22.10.2025

கடந்த 16.10.2025 மற்றும் 22.10.2025 இல் இறைபதமடைந்த
எமது அன்புத்தெய்வங்களான

**அமரர் காசிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை** — **அமரர் காசிப்பிள்ளை குலசேகரம்**

ஆகியோரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 19.11.2025 (புதன்கிழமை) காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருந்தியக் கிரியைகள் 21.11.2025 (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் இல. 101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அமரர் காசிப்பிள்ளை குலசேகரம் ஆகிய அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அமரர் காசிப்பிள்ளை குலசேகரம் (B.A, Dip in Edu, M.Ed) சித்தங்குறிச்சி பூநகரியைப் பிறப்பிடமாகவும் நெற்புலவு, பூநகரி, கொழும்புத்துறை & 101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னார் (22.10.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்திருந்தார். அன்னார் (முன்னாள் அதிபர் பூநகரி மத்திய மகா வித்தியாலயம், முன்னாள் ஆசிரியர் - நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா கல்லூரி, ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் யாழ் வலயம், முன்னாள் யாழ்.மாவட்ட தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி, உறுப்பினர் மற்றும் ஆலோசகர் - கலாசார குழு பூநகரி பிரதேச செயலகம் மற்றும் உரிமையாளர் மற்றும் ஸ்தாபகர் பழனி பான்சி யாழ்ப்பாணம்.) அமரர்களாகிய முருகேசு காசிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அமரர் குலசேகரம் ஆனந்தி (ஓய்வு நிலை சிராப்பர்-JMC) இன் அன்புக் கணவரும், நெல்லிநாதன் - தேவராஜமலர் தம்பதிகளின் மருமகனும், மதுரகன் (BS.C நில அளவையாளர்), குலமகள் (சதுரங்க பயிற்றுவிப்பாளர்), திபாகரி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கௌதமி (முள்ளியவளை), ஸ்ரீதரன் (பிரத்தியேக செயலாளர் கடற்தொழில் அமைச்சர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிருத்திக், ஸ்ரீவினி, தர்ஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், புஷ்பநாதன் (ஓய்வு நிலை தபால் அஞ்சல் அத்தியட்சகர்), சகுந்தலாதேவி (வவுனியா), ரவீந்திரராஜா (சுவிஸ்), துரைசிங்கம் (UK), கோமளாதேவி (மன்னார்), சித்ராதேவி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவானி, யோகராஜா (SLT), ஜமுனா (BA சுவிஸ்), வளர்மதி (ஆசிரியர்), சந்திரகுமார் (மன்னார்), கிருஷ்ணகரன் (UK) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

இவ் அழைப்பிதழை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Kirudthik Land Surveying
0777177383

தகவல்:
குடும்பத்தினர்

(1711)


## யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய
"வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்

- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(5725)


# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
## சிதம்பரநாதன் இளங்குன்றன்



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் (40 ஆம் அணி)

பிறப்பு: 08.09.1997

அழிப்பு: 17.11.2020

கொடியோரின் நயவஞ்சகத்தால்
உன் திருமுகம்
மறைந்து ஆண்டு ஐந்து
ஆனாலும் மறையாது
உன் நினைவுகள்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நிரந்தர முகவரி
நாகர்கோவில் தெற்கு, நாகர் கோவில்.
தற்காலிக முகவரி
மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டி. (C-4340)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.